உ

சிவமயம்.

# பிராசாததீபம்

மூலமும் உரையும்.

பொது சன நூல் நிலையம்
அனலைதீவு



கலாநிதியந்திரசாலை,
பருத்தித்துறை.

1933

உ

திருச்சிற்றம்பலம்.

# பிராசாததீபம்

மூலமும்,

அச்சுவேலி

பிரமஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்

இயற்றிய உரையும்.

பொது சன நூல் நிலையம்
யா. அ. ச. உ.ப அலுவலகம்
இ[illegible]ணவில் தீவு

அவர்குமாரர்

வைத்தீசுவரசர்மா அவர்களால்

பருத்தித்துறை

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

---

கலியப்தம் ௫௦௩௪.

ஆங்கிரச௵ தை௴.

---

(All Rights Reserved.)

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

புலோலி,

ஆரியதிராவிட மகாபண்டிதர்

## பிரமஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்

அவர்கள் சொல்லியவை.

உலகினர் மதிக்கு மேன்மை யுளபிரா சாத தீபம்
இலகுற வுரைநன் காய்ந்திங் கியற்றினு னந்த ணுள
குலமுளான் குமார சாமிக் குருக்கள்சீ ரச்சு வேலித்
தலமுளா னறிஞர் போற்றுந் தகையுளான் குணமு ளானே.

சுருதியா கமங்க ணன்கு சொலும்பிரா சாத மேன்மை
தெருளுறு பெரியோர் தாமே திருவிழா தீக்ஷை மேலாம்
பிரதிட்டை முதல செய்யிற் பெறுபல னளவின் றாகும்
வரமிகு மதியான் மிக்கோர் மகிழ்ந்தினி தேற்பர் தாமே.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௨ | ௬ | வெண்வகை | லெண்வகை |
| ௨ | ௨௧ | ௨௪—௨௫ | ௨௨—௨௩ |
| ௬ | ௧௯ | ஆறிழ்க்கமல | ஆறிதழ்க்கமல |
| ௬ | ௨௪ | பிரிவுறவே | பிரிவறவே |
| ௧௦ | ௩௨ | ஹாஜொ | ஹாஜெ |
| ௪௨ | ௮ | ஸெஜுஶஂ | ஸெஜுஶஃ |
| ௧௩ | ௫ | ஶக்திஂ | ஶக்திஃ |
| ௧௪ | ௨௧ | சொல்லலப் | சொல்லப் |
| ௨௧ | ௩௨ | சோடகலை | சோடசகலை |
| ௨௨ | ௨௯ | அர்தசந்திரம் | அர்த்தசந்திரம் |
| ௨௬ | ௨௪ | கிரிசன | கிரசன |
| ௪௦ | ௧௧ | நல்வல | நல்லல |
| ௪௬ | ௨௧ | வய | லய |

௩௭ம் பக்கம் ௨௮ம் செ. முதலில் "பன்னிருகலைகளின் மாத்திரை கூறப்படுகின்றது" என்பது சேர்க்க.

௩௧ம் செ. உரையில் ௨௭ வரிதொடங்கி "அதன்மேல் நிரோதிகலைக்கு மூன்றங்குலமும், அதன்மேல் நாதகலைக்கு மூன்றங்குலமும் என்பனவற்றை" நீக்குக.

☞ இப்பிராசாததீப உரை அச்சிடுதற்கு அச்சுவேலி ஸ்ரீ செ. ஐயாத்துரை அவர்கள் பத்துரூபாவும், ஸ்ரீ அ. சின்னப்பு அவர்கள் பத்துரூபாவும், ஸ்ரீ வை. அருளம்பலம் அவர்கள் மூன்றுரூபாவும் உபகரித்தார்கள். சிவபெருமான் திருவருள்புரிக.

சிவமயம்.

# முகவுரை.

உலகத்திலேயுள்ள பற்பல சமயங்களையும் அங்கமாகக் கொண்டு தாம் அங்கியாய் இராசாங்கத்தமர்ந்து விளங்குவது வைதிகசைவசமயமேயாம். ஏனைய சமயங்களிலுள்ள பொருள்களெல்லாம் சைவசமயத்தில் அங்கங்களாகக் காணப்பட்டு ஏனைய சமயங்களால் உணரப்படாத பொருள்களுங்காணப்படும். மற்றைய சமயங்களிலுள்ள பொருள்கள் அனைத்தையும் சைவசமயங்கொள்வதுபோலச் சைவத்திலுள்ள பொருள் அனைத்தையும் ஏனைச்சமயம் ஒன்றேனும் கொள்வதில்லை. ஆகையினாலே, மற்றைச் சமயங்களுக்குச் சைவசமயந் தோல்வியடைவதில்லை. இத்தகைய சிறப்புவாய்ந்த சைவசமயப்பொருள்களை இனிதுவிளக்கும் நூல்கள் சிவாகமங்களேயாகும். சிவாகமங்கள் முடிந்த முடிபாயிருத்தலின், சித்தாந்தம் எனவும்படும். "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" எனச் சிவஞானசித்தியார் கூறிற்று.

இச் சிவாகமங்களின் சரியாபாதமுங் கிரியாபாதமும் யோகபாதமும் ஞானபாதமும் அவற்றின் வியாக்கியானங்களும், அவைகளின்வழிவந்த நூல்களும் வடமொழியிலேயே பெரும்பாலும் இருத்தலின், அம் மொழிப்பயிற்சியில்லாதவர்களுக்கும் பயன்படும்வண்ணம் முற்காலத்திலிருந்த சிவாநுபூதிச் செல்வர்களாகிய பெரியோர்கள் பிராசாததீபம், பிராசாத அகவல், பிராசாதசட்கம் முதலிய நூல்களைத் தென்மொழியில் இயற்றியருளினார்கள். அவைதம்முள் பிராசாததீபம் திட்பமும் நுட்பமுஞ்செறிந்தது. பிராசாத இயல்முழுவதையும் விரித்துரைப்பது. சிவஞானபோதமுதலிய சாஸ்திரங்களைப்பயில்வார் ஆவசியமாகக் கற்றுக்கொள்ளத்தக்கது. காப்புடன் ௩௬ திருவிருத்தங்களாலாயது.

இத்துணைப் பெரிய அரிய சாஸ்திரமானது இன்னும் புத்தகஉருவில் அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆதலால் இதனை ஆராய்ந்து வெளியிடுதல்நன்று என்று வடமொழியின்கணுள்ள பிராசாதஷட்சுலோகிவியாக்கியானம், சித்தாந்தசாராவளி வியாக்கியானம், வாதுளசுத்தாக்கியவியாக்கியானம் முதலிய நூல்களையும், தமிழிலுள்ள தத்துவப்பிரகாசம் திருமந்திரம்முதலிய நூல்களையுந் துணையாகவைத்து மூன்றுபிரதிகளைக்கொண்டு பரி

சோதித்து வரலாயினேம். இங்ஙனம் பரிசோதித்துவருங்காலத்தில் கல்வி அறிவு ஆதியவற்றிற் சிறப்புற்றோங்குபவராகிய இலக்கணவிளக்கப் பரம்பரை, திருவாரூர் ஸ்ரீமான். சோமசுந்தர தேசிகர் அவர்கள் செந்தமிழ் உஅம் தொகுதி கoம் பகுதியில், மூன்றுபிரதிகளைக்கொண்டு பரிசோதித்து வெளியிட்டதைக்கண்ணுற்று, ஆராய்ந்துபார்த்தேம். தேசிகர் அவர்கள்வெளியிட்டமையும் சிலதிருத்தங்கள்செய்வதற்கு உதவியாயிருந்தது.

இப்பிராசாததீபம் இயற்றினார்பெயர் முதலியன அறியக்கூடியதாயில்லை. எனினும் இவர் சிவஞானச்செல்வமும், சைவசித்தாந்த உண்மையறிவு நிறைவும் உடையவர்என்பதும், சீகாழித் தலத்தினர் என்பதும் இந்நூலானே நன்கு உணரப்படும்.

இந்நூல் பத்திபவடிவாயிருத்தலின், இதன்நன்மையை யாவரும்பெறும்படி ஓருரை இயற்றி அச்சிலேற்றிப் பிரகடனஞ் செய்யவேண்டும் என்னும் ஆசைமீதூரப்பெற்றோம். அறிவினாலும் பொருளினாலும் மற்றெவ்வாற்றாலும் வலிகுன்றியஎமக்கு அங்ஙனம் உரையியற்றிப் பிரகடனஞ்செய்தல் பெரிதுங் கஷ்டமாயவிடத்தும் "தனதடிவழிபடுபவரிடர் கடி—கணபதி" யும், "தாரகப்பிரமமான மாக்கயமுகத்துவள்ளலு" மாகிய ஐந்துதிருக்கரத்தெந்தையினது திருவருள்வன்மையால் இனிது முற்றுப் பெற்றது. இப்பிராசாததீபச் செய்யுட்களுக்கு மூலமாய்நின்ற பிரமாணங்களை வேண்டுமிடமோர்ந்து உதாகரித்திருக்கின்றனம்.

பரிசோதிக்குங்கால் ஏட்டுப்பிரதிகளைத் தந்துதவிய பெரியோர்களுக்கு நன்றிபாராட்டுங் கடப்பாடுடையேம்.

இவ்வுரையைப் பார்வையிட்டுச் சிறப்புப்பாயிரந் தந்த குருமூர்த்திகளுக்கும் எமது நமஸ்காரம் உரியதாகுக.

இங்ஙனம்.

ச. குமாரசுவாமிக்குருக்கள்,

அச்சுவேலி.

ஶிவமயம்।

# ஹாலாஸ்யாஷ்டக ஶ்லோகா:।

ஶ்ரீமத்ஸ்காந்தே நிவாஸபவனாத்ஸுந்தராஜேஶ்வரோ நா
ஹர்ம்யாத்ருக்ஷணரோஹிணங்கா நிஹோ நாஸ்யஜராஜேஶஶிவ:।
ஊர்த்வம் தஸ்யாதிதஸ்மின் நிவஸதி தவ பாதாம்புஜம் ஹ்ருத்பங்கஜம்
பாதாப்ஜம் ஶிவாப்யாம் தஸ்ய ஶிவாப்யாம் தியோ பாது॥ ௧

தஸ்மாத்ஸுந்தரேஶஸ்தவ ஸுந்தரதாபாஸ்வத் தவ லிங்கஶதை:
க்ஷேத்ரேஷு ஸர்வேஷு ஜ்யோதிர்லிங்காத்மகம் தத:।
ஶ்ரீமத்தேஷ்ட்வ தஸ்ய ஷட்கஸஹிதாப்ஜகோஶஸஹாய: பூர்ணம்
ஜிஹ்வாயாம் ஸ்மரணம் பாவயேத் விஷயமாத்ராங்கி தாஸ்மரயேத்॥ ௨

வித்யாதாநம் விஜயஸ்ஸ்ரீ த்ரயதந்த்ராயாஸஹாயம் ஹரம்
தத்ஸ்தோத்ரம் பாவகேஶ்வரவிகாஸஸம்வர்த்ஸேஷு பாவா।
ஶ்ராத்தாதிஸந்நயனம் ஶ்ரீதத்விஷ்டஸ்வம் விதநாவித்யாஸஹஜா
விம்ஶஸப்ததஶம் நவம் விஶ்வேஶ்வரம் த்ரைவார்ஷிகம்॥ ௩

ஸர்வே ரோகா வஶ்யாஶ்சரோதிதம் விஶ்வாத்ராஷ்டாதஶாஸ்த்ர தா
த்ரைலோக்ய ஸகலாம் ஶாந்திம் நிஜவஸ்த்ரா ஸந்தேஹவர்ஜிதா:।
த்ரைகாலதஸ்தே லிங்காத்மதிஜ்யோதிர்மய ஶாந்த:
ஸப்யாஸ்ராஶ்ச தேஷாமேவ ஶுபமஸ்து ஸதா தவ த்ரயம்॥ ௪

விம்ஶதிஸஹஸ்ரஶாஸ்த்ரம் ஸம்ஸ்ருஷ்டம் ஸஹஸ்ரம்
தஸ்மாத்ஸர்வஸ்யைகாகாரம் வஸ்து ஸகலம் ஶுபம் ஶாம்பவிகா।
ஶஶ்வந்நித்யம் ஶாந்தம் தத்வம் ஶிவம் ஹ்ருதயே த்ரிதயே
வஸ்துஸம்பூர்ணம் ஶாம்பவிகாபதம் விஶ்வேஶ்வரம் ப்ரணதோ(அ)ஸ்மி॥

ஷட்கோணே வேதஶாகாஸ்வம் க்ருதபகஸம் பாவஶேஷாம்ஶிகா
ஸஜ்ஞாநாம்ருதவர்ண்ண பூர்ண்ணவௌஸ நாவாஶ்யாநர்ஷ ஹாவலி:
ஸாஶக்தி த்ருதவர்ண்ண பூர்ண்ண விஜய தேகாவ்யந்ந நாவ்யாப்ரஹோ
ரிஷ்டே ஶக்தி தத்வர்ஷ யேஹ தஶிவ: கல்வாகலாகோடிக்ஷ்யந்தி: ॥ ௬ ॥

இதி ப்ராஸாதஷட்ஶ்லோகீ
ஸமாப்தா ।

---

இச்சுலோகங்கள்ஆறும் பிராசாதபீபஉரையில் பின்னரே ஆங்காங் குக்காட்டப்பட்டன. ஆயினும் "பிராசாதசட்சுலோகி" என்னும் இந்நூல் படிப்பவருக்கு எளிதில் பயன்படும்பொருட்டு ஈண்டு ஒருங்கு அச்சிடப்பட் டிருக்கின்றது.

ஆர்ஒ சசி

பொது சன நூல் நிலையம்
யா. அ. 1. உ 11 அலுவலகம்
அனலைதீவு

# பிராசாதப்படம்.

| | கலை. | மாத்திரை. | வடிவம். | நிறம். | தானம். | அங்குலம். | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| | கோஷ கலை | ½ | ஹ் | மின்னொளி | மூலாதார முதல் நாபிவரை | 12 | |
| க | மேதா கலை | 3 | அ | அக்கினிச் சுவாலை | நாபிமுதல் இருதயம்வரை | 8 | ஆன் வம் |
| உ | இரச கலை | 2 | உ | சந்திர சூரியப் பிரபை | இருதயமுதல் கண்டம்வரை | 8 | பு மு |
| ங | விட கலை | 1 | ம | மின்னொளி | கண்டம் முதல் நாவடி வரை | 4 | ம |
| ச | விந்து கலை | ½ | ० புள்ளி | தீபஒளி | நாவடிமுதல் புருவநடு வரை | 4 | சுத் |
| ரு | அர்த்த சந்திர | ¼ | ◡ பாதிச்சந்திரன் | வாளொளி | புருவநடுமுதல் பிரமரந்திரம்வரை | 3 | |
| சு | நிரோதி | $\frac{1}{8}$ | △ முக்கோணம் | புகை | | 3 | |
| எ | நாதம் | $\frac{1}{16}$ | o\|o இருவிந்துவுடன் கூடியதண்டம் | மாணிக்க ஒளி விந்துபளிங்கு நிறம் | | 3 | |
| அ | நாதாந்தம் | $\frac{1}{32}$ | வலவிந்துவோடு கூடியகலப்பை | இரு மின்னொளி விந்து, கறுப்பு | | 3 | |
| கூ | சத்தி | $\frac{1}{64}$ | இட விந்துவோடு கூடியகலப்பை | நூறுசூரியப் பிரகாசம் விந்து பச்சை | பிரமரந்திரமுதல் துவாதசாந்தம்வரை. | 1 | |
| க0 | வியாபினி | $\frac{1}{128}$ | வலவிந்துவோடு கூடிய சூலம் | ஆயிரம் சூரியப்பிரகாசம், விந்து சிவப்பு | | 3 | |
| கக | வியோமரூபினி | மனமிறந்து தியானிக்கப்படுவது | ∴ ஞானவிந்து | ஞானகாயம் | | | |
| கஉ | அநந்தை | | | ஞானசமுத்திரம் | | | |
| கங | அநாதை | | | ஞானக்கண்ணடி | | — | |
| கச | அநாசிருதை | | | மகாகோடிசந்திரப்பிரகாச | | | |
| கரு | சமனை | $\frac{1}{256}$ | இருவிந்துவோடு கூடிய 2ரேகை o\|\|o | கோடிசூரியப் பிரகாசம், விந்து நீலம் | | 4 | |
| கசு | உன்மனை | $\frac{1}{512}$ | ○ விருத்தம் | அநந்த சூரியப் பிரகாசம் | | 4 | |

| | அங்குலம். | தத்துவ வியாப்தம். | அதிபர். | சூனியம். | குணம். | மல சோதனை. | எழுவகைத் தோற்றம் | அவத்தை | பகுப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மூ ...ரை | 12 | — | அநாகத சிவன் | | | ஆகாமியம் | தாவரம் | | |
| இ ...ரை | 8 | ஆன்மதத்துவம் 24வரை | பிரமா | | தூலப்பிராசாதம் | பிரகிருதி மாயை | ஊர்வன | டாபசாசகிரம் | விந்துகலை |
| ...தல் ...ரை | 8 | புருடன் முதல்ஆறு | விஷ்ணு | | | | | | |
| ...த | 4 | மாயை | ருத்திரன் | ஆதிசூனியம் | | அசுத்தமாயை | நீர்வாழ்வன | | |
| ...ல். | 4 | சுத்தவித்தை ஈசுரம் | மகேசுரன் | | | | | பரம செப்பனம் | |
| | 3 | சாதாக்கியம், சத்தி. | சதாசிவன் | | சூக்குமப்பிராசாதம் | மாயேயம் | பறவை | பரமசுழுத்தி | நாதகலை |
| | 3 | | | மத்திய சூனியம் | | | | | |
| | 3 | | | | | சுத்தமாயை | நாற்கால்விலங்கு | | |
| | 3 | | | | | | | | |
| | 1 | | ஆகதசிவன் | அந்த சூனியம் | அதிசூக்குமப் பிராசாதம் | திரோதானம் | மனிதர் | துரியம் | சத்திகலை |
| | 3 | | | ஆதி சூனியம் | | | | | |
| | — | சிவதத்துவாந்தம் | பரமசிவன் | | அதிசூக்குமப்பிராசாதம் | — | — | துரியாதீதம் | சிவகலை |
| | 4 | | அநாகதசிவம் | மத்திய சூனியம் | மகாசூக்குமப் பிராசாதம் | ஆணவம் | தேவர் | துரியம் | சத்திகலை |
| | 4 | | | அந்த சூனியம் | | | | | |

[illegible]

பொது சன நூல் நிலையம்
[illegible]
அனலைதீவு

பொது சன நூல் நிலையம்
யா. அ. ச. உ. ப. அலுவலகம்
அனலைதீவு

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# பிராசாததீபம்

# மூலமும் உரையும்.

நூலாசிரியர் அறம் பொருள் இன்பம் வீடு என்னும்நான் கனுள் வீட்டுநெறிகாட்டுவான் தம்மாலெடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றியினிது முற்றுதற்பொருட்டு ஆதிக்கண்ணே விநாயகக்கடவுளை வணக்கஞ்செய்கின்றார்.

வையமிசை மன்னுயிர்கண் முத்திபெற வானருளால் வகுத்தநூலி, லெய்துபிரா சாதமுரைத் தற்கிறைவ னிமவரையி னிறைவி யீன்ற, செய்யநிறத் தொருகோட்டு மும்மதத்து நால்வாயைங் கரஞ்சேர் காழிக், கைவரையி னிருபதமெங் கண்ணிணைசேர்த் திதயமதிற் கருதல் செய்வாம்.

இதன்பொருள்: உலகத்திலேயுள்ள நிலைபெற்றஉயிர்கள் முத்தியடையும்பொருட்டுச் சிவபெருமான் திருவருளால் வகுத்தருளிய வேதாகமங்களிற்பொருந்திய பிராசாதத்தைச் சொல்வதற்கு, சிவபெருமானும் இமயமலை அரசன் புத்திரியாராகிய உமாதேவியாரும் பெற்ற செந்நிறத்தையும், ஒற்றைத்தந்தத்தையும், மும்மதத்தையும், தூங்கியவாயையும், ஐந்து திருக்கரங்களையுமுடைய சீகாழிப்பதியில்எழுந்தருளியிருக்கும் விநாயகக் கடவுளுடைய இருதிருவடிகளையும் எமது இரு கண்களிலுஞ்சேர்த்தி மனதில் தியானஞ்செய்வாம் என்றவாறு.

ஈன்றகைவரை ஐங்கரஞ்சேர்கைவரை எனத்தனித்தனி இயையும். கைவரை என்பது யானைமுகக்கடவுள் என்னுங்குறிப்பு. அரன்=ஆன்மாவோடு சகசமாகியமலத்தைப்பக்குவமறிந்து சங்கரிப்பவன். சிவபெருமான் கருணையினாற்றிருவுருக்கொண்டு வேதாகமங்களைக் கோவைப்பட அருளிச் செய்திலாரேல் பிரளயாகலர் சகலர் என்னும் பசுவருக்கம் இரண்டும் முறையே முன்னிலையினும் படர்க்கையினும் நின்று உணர்த்தினாலன்றி உணரப்படாமையின் வீடுபேறடைதல் இல்லையாகும். அதுவன்றித் திருமால்முதலிய தேவருக்கும் மானுடர்க்கும் குருபரம்பரையின்வைத்து அருளுதலுஞ்சென்றிடா என்னும் பொருள்பட சித்தியார் சூத், க— அதி, உ— செய், சஙு— கூறுதல்பற்றி "வையமிசை... நூலில்" என்று கூறப்பட்டது. கோயில் என்னும் பொருளையுடைய பிராசாதம் என்னுஞ்சொல் சிவன்வெளிப்படுதற்கு இடமாதலால் கோயில்போன்ற ஒருமந்திரத்தை உணர்த்துகின்ற வாசகமாய்நின்றது. பிராசாதபதத்துக்குச் சுத்தாக்கியை என்னும் நூலிற் சொல்லப்பட்டபொருளாவது; பிரா=சிவஞானம், சா=

கதி, த=கொடுப்பது. சிவஞானகதியாகிய முத்தியைக்கொடுப்பதால் பிராசாதம் எனப்படும். வாதுளசுத்தாக்கியத்திலே பிரா=சிவம்; சா=சத்தி; த=முத்தியைக்கொடுப்பது எனக்கூறப்பட்டிருக்கிறது. (க)

## குருவணக்கமும் செயப்படுபொருளும் கூறுகின்றார்.

விஞ்சதியுஞ் சோடசமுந் துவாதசமுந் தசமுநவ மேவு மெண்ணு, றைங்கலைபி ளுமத்தா வெண்வகையா லாகமங்க ளறைந்த வாற்றால், வெங்குருமா நகர்வள்ளல் பதம்பரவி யெண்ணிரண்டு கலையின் மேன்மை, துங்கமுறப் பிராசாத தீபமெனத் தமிழினாற் சொல்லலுற்றாம்.

இ—ள்: (பரமசிவவாசகமாகிய பஞ்சாக்ஷரத்தின் பீசமாய்நின்ற ஹௌம் என்னும் பிராசாதமானது) இருபதுகலையும், பதினாறுகலையும், பன்னிரண்டுகலையும், பத்துக்கலையும், ஒன்பதுகலையும், எண்கலையும், அறுகலையும், ஐங்கலையும் என்னும் பெயரால், எட்டுவகையாகச் சிவாகமங்கள் கூறியவழியாகச், சீகாழிப்பதியிலிருக்கும் எமது குருவின்பாதங்களை வணங்கிச், சோடசகலைப்பிராசாதத்தின் மேன்மைகளை உயர்ச்சிபொருந்தப் பிராசாததீபம் என்னும்பெயருடன் தமிழினாற் சொல்லத்தொடங்குகின்றோம் எ—று.

விஞ்சதி-இருபது; சோடசம்-பதினாறு; துவாதசம்-பன்னிரண்டு; தசம்-பத்து; நவம்-ஒன்பது. சோடசகலைப்பிராசாதத்தைக் கூறவே அதன் கீழுள்ள பஞ்சகலாப்பிராசாதம்முதலிய அறுவகைப் பிராசாதங்களும் அதனுள் அடங்குதலையும், ஆசிரியர் இருபதுகலைப்பிராசாதத்தை உ௯ம் உ௰ம் செய்யுள்களுள் சுருக்கி விளக்கியிருத்தலையும் அறிக. பிராசாதமந்திரசெபம் யோகமார்க்கமாகிய சகமார்க்கம் எனப்படும். அது, "ஆதாரசோதனை யாநாடிசுத்திகள்—மேதாதியீரெண் கலந்தது விண்ணொளி— போதாலய த்துட் புலன்கரணம்புந்தி —சாதாரணங்கெடலாஞ் சகமார்க்கமே." (திருமந்திரம்.) என்பதால் அறிக.

துவிசதிகாலோத்தரத்திலே, "பிராசாதசிகைமுடிவில்நின்று தீக்கைபுரியும் ஆசிரியனே தன் சீடரோடு சிவசாயுச்சியமடைவான்" எனக் கூறப்படலானும்; 'பிராசாதமறியாதவன் குருவல்லன் எனவும் பிராசாதமறியார் சிவனை அறியார் எனவும், மாத்திரை, ஒளி, காரணேசுரர், பெயர், சூனியம், அங்குலம், அத்துவா, சத்தி, ஆகிருதி என்பவற்றோடு பிராசாதகலையின் வியாத்தியை உணர்ந்தவனே முத்திபெறலாம்' எனவும் பலவிடங்களிற் கூறப்படலானும் பிராசாதமகிமை உணர்ந்துகொள்க.

### துவிசதிகாலோத்தரம்.

[illegible]
[illegible]

"புட்பங்களால் அஞ்சலியைநிறைத்து, மூலமந்திரத்தை ஔகார முதலான கலைகளோடுகூடினதாய், மிகுந்த சூரியப்பிரகாசமுள்ளதாய், பிரா

மாமுதலிய காரணேசுரத்தியாகக் கிரமத்தால் துவாதசாந்தமளவும் உச்சரித்துச் சர்வநாயகமாய் நிட்களமாய் இருக்கிற பாவிந்துவை ஞானானந்தமய வடிவாய்ச் சிந்தித்து'' என்றற்றொடக்கத்த பத்ததிவசனங்களாலும் சிவபூசை, பிரதிட்டை முதலியவற்றில் சிவனை ஆவாகனஞ்செய்தற்கும் இப்பிராசாதயோகநெறி நன்குவேண்டப்படும் என்பது பெறப்பட்டது.

அஞ்ஞானம், ஞானம், ஞேயம் என்னும்மூன்றனுள் அஞ்ஞானம் இருள்போலாம். ஞானம் விளக்கொளிபோலாம். அறியவேண்டிய வஸ்துவாகிய விஞ்ஞேயம் சூரியன்போலாம். ஞானத்துக்கு விசேடத்தன்மை எதனாலெனின்: சிவசத்திசொரூபமான பிராசாதம் பதிந்தவனுடைய மனதில் மலாந்தகாரம் அழிந்துவிடும். அவன் ஞானசொரூபியாயும் நித்தியமுத்தனாயும் இருக்கிறான். சிவனை அறிதற்கு அவருடைய சிற்சத்தியின்றி முடியாது. ஆதலின் சிற்சத்திரூபமாகிய ஞானமே விசேடித்ததாதல் காண்க. இதனாலே சிவஞானத்துக்கு ஒப்பும் மிகையும் இன்றென்பதும், பிராசாதம் எல்லாவற்றுக்கும் மேலாம்என்பதும் பெறப்பட்டது.

சிவஞானரூபமாகிய பிராசாதமந்திரம் ஐந்துவகைத்து. அவை சுத்தப்பிராசாதம், மூலப்பிராசாதம், தத்துவப்பிராசாதம், ஆதிப்பிராசாதம், ஆத்துமப்பிராசாதம் என்பன. (௧) நாதம்என்னும் பெயரையுடைய ஹகாரம் சுத்தப்பிராசாதம்எனப்படும். நாதம், குஹ்யம், பரம், சீவம், பூதம், சாந்தம், தத்துவாந்தம், சிவார்ணம், சூநியம் என்பன இதன் பரியாயநாமங்களாம். சுத்தம் என்பது சமஸ்ததோஷமில்லாதசிவமாம். அதனால் சிவபீசம் சுத்தம்என்றுசொல்லப்படும். (௨) ஹ்ரௌம் என்பது மூலப்பிராசாதமாம், சமஸ்ததத்துவங்களுக்கும் சிவனே மூலம்ஆகையால் சிவபீசம் மூலம் என்றுசொல்லப்படும். அக்கினிபீசத்தோடுகூடிய இது வைதிகப்பிராசாதம் எனவும்படும். இறப்பு எதிர்வு நிகழ்வு ஆகிய காலங்களிலுள்ள பொருள்களெல்லாம் மூலப்பிராசாதத்தினின்றே தோன்றுகின்றன. அகாராதி க்ஷகாராந்தமான எழுத்துக்கள் பஞ்சமகாபூதசம்பந்தமுள்ளன. இக எழுத்துக்களையும் ஐந்தாகப்பிரிக்கும்போது ஒவ்வொருபூதத்துக்கும் முறையே பத்துஎழுத்துக்களாம். பஞ்சபூதசம்பந்தமான எழுத்துக்களெல்லாம் சிவனாகிய ஹகாரத்துக்குப் புரியட்டகதேகம் எனப்படும். (௩) ஹம் என்பது தத்துவப்பிராசாதமாகும். (௪) ஹௌம் என்பது ஆதிப்பிராசாதமாம். இது தாந்திரிகப்பிராசாதம் எனவும்படும். இப்பிராசாதம் சிவனுக்கு உருவமாகும்முறை வருமாறு:— ஹகாரம்–தேகம்; நிட்களரூபமாகிய பராசத்திஎன்னும் விந்து–முகம்; ஆதிசத்திரூபமாகிய ரேகைவடிவான நாதம்–கிரீடம்; பக்கத்திலுள்ள இரண்டு சிருங்கங்கள்–இரண்டுபுயங்கள்; கீழ்ரேகைகள்–பாதங்கள்; (௫) ஹ்ஸ என்னும் இரண்டு அக்கரங்களும் ஆத்துமப்பிராசாதம் என்றுசொல்லப்படும். இருதயமத்தியிலேஇருக்கிற இம்மந்திரம் சீவப்பிராசாதம் எனவும்படும். ஹகாரம் சிவத்தையும் ஸகாரம் சத்தியையுங்குறிக்கும். இந்த ஐந்துவிதபிராசாதமும் சிவபீசமாயிருத்தலின் சிவமந்திரம் எனப்படும். ஹகாரம் ஆ, ஈ, ஊ, ஐ, ஔ, அஃ என்னும் ஆறுயிர்களோடு புணர்ந்துசடங்கங்கட்கு வீரியபீசங்களாம். ஹாம், ஹீம், ஹூம், ஹைம், ஹௌம், ஹஃ என்பன தாந்திரியாங்கப் பிராசாதங்களெனப்படும். ஹ்ராம், ஹ்ரீம், ஹ்ரூம், ஹ்ரைம், ஹ்ரௌம், ஹ்ரஃ

என்பன வைதிகப்பிராசாதங்களெனப்படும். ஹகாரம் அ, இ, உ, ஐ, ஔ என்னும் ஐந்துயிர்களோடும்புணர்ந்து பஞ்சப்பிரமங்கட்கு வீரிய பீசங்களாம். அவை ஹாம் ஹிம் ஹூம் ஹைம் ஹௌம் என்பன. அவை தாந்திரிகப்பிராசாதங்கள் எனவும்படும். ஹ்ராம், ஹ்ரிம், ஹ்ரூம், ஹ்ரைம், ஹ்ரௌம் என்பன வைதிகப்பிராசாதங்கள் எனப்படும். இனி ஹௌம் என்பது சகளப்பிராசாதம் எனவும், ஹளம் என்பது நிட்களப்பிராசாதம் எனவும், சோடசகலையோடுகூடிய பிராசாதமானது கலாட்டியப்பிராசாதமெனவும், ஹ்ரீ என்பது கமலாங்கிதப்பிராசாதம் எனவும், ஹாம் என்பது க்ஷவணப்பிராசாதம் எனவும், ஹா என்பது அந்தஸ்தப்பிராசாதம் எனவும், பெயர்பெறும்.

ஆகமம் என்பது (அதிபரமாப்தரினின்றும்) வந்தது எனப் பொருள்படும். இன்னும் ஆ என்பது பாசம் எனவும், க என்பது பசு எனவும், ம என்பது பதி எனவும் பொருள்படுதலால், திரிபதார்த்தலட்சணத்தை உணர்த்தும் நூல் என்பதும் பொருளாம். ஆ என்பது சிவஞானமும், க என்பது மோக்ஷமும், ம என்பது மலநாசமுமாதலால், ஆன்மாக்களுக்கு மலத்தை நாசப்பண்ணிச் சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைக் கொடுத்தல்பற்றி ஆகமம் எனப் பெயராயிற்றென்று கூறுதலும் ஒன்று. வெங்குரு சீகாழியின் பன்னிருதிருநாமங்களுள் ஒன்று.

உலகோரும் சத்திநிபாதரும் ஆகிய இருவரும் உய்தற்பொருட்டு வேதமும், ஆகமமும் முறையே அருளிச்செய்யப்பட்டன. வேதம் பல பொருள்படத்தோன்றும் சூத்திரமும், சிவாகமம் அதனை அங்ஙனமாகவொட்டாது தெளித்துரைக்கும் பாடியமும்போலாம் என்று அருணந்திசிவாசாரியர் அருளிச்செய்திருக்கின்றனர். நீலகண்டசிவாசாரியர் பிரணவம், பஞ்சாட்சரம், பிராசாதமந்திரம் முதலியனவெல்லாம் வேதத்தும் ஆகமத்தும் சமமாகக் காணப்படுகின்றன என்றும் வேதசிவாகமத்துக்கு வேற்றுமை இல்லையென்றும், வேதசிவாகமங்கட்குப் பேதம் காண்கின்றிலம் வேதமே சிவாகமம் என்றும் கூறியருளினர். வேதசிவாகமங்கட்குப் பேதமின்மை,

வேதமோ டாகம மெய்யா மிறைவநூ
லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே.

(திருமந்திரம்).

என்பதனாலும்,

வேதாகமத்துணிபிரண்டில்லையொன்று.

(தாயுமானசுவாமிகள்).

என்பதனாலும் நன்கு உணரலாம்.

வேதசிவாகமம் இரண்டினும் பிராசாதம் கூறப்பட்டமைபற்றியே ஆசிரியர் "ஆனருளால்வகுத்த நூலிலெய்துபிராசாதம்" எனப்பொதுப்பாயிரச்செய்யுளிற்கூறினர்என்றும், சிவாகமமே தெளித்துரைத்தலின், "ஆகமங்களறைந்தவாற்றால், பிராசாததீபமுரைத்தல்செய்வாம்" என இச்செய்யுளில் சிறப்பாகவிதந்தெடுத்து ஓதினர்என்றும் அறிந்துகொள்க.

அதர்வவேதத்திலே பிராசாதமந்திரங்கூறப்பட்டிருக்கின்றது என்பது சுத்தவாதுளவியாக்கியானத்தால் உணரப்படுகின்றது. "ஹ்ர்ஸ்வதீர்க்கப்புலுத" என அதர்வசிகோபநிடதத்திற் கூறப்பட்டதூஉம் பிராசாதத்தையேகுறிக்கும் என்ப. (௨)

---

## நூல்.

அவதாரிகை—பதினாறுகலைப்பிராசாதங்களுள் முதற்கலையின்பகுதியாகிய கோஷகலை என்னும்பெயருடைய ஹகாரத்தினுற்பத்தித்தானம் பிரபை வியாத்தி என்பவை முதலாஞ்செய்யுள்முதல், மூன்றாம்செய்யுள் நான்காம்அடி முதற்பாசம்வரையும் கூறப்படுகின்றன.

வெண்கமல நாலிதழா மூலாதா ரத்தின்
மிகநாப்பண் ணூன்றிவிருத் தாகாரச் சர்ப்ப
மங்கதுபோ லெழுந்திருக்குங் குண்டலியி னடுவே
யரவிந்த நூல்போலங் கெழுபத்தீ ராயிரமா
மெண்படு நாடிகளுக்கு மூலமதாம் பிரம
மெனுநாடி மத்தியத்தி னசபைமனு வகாரத்
தொண்பயிலு நிறமின்னி னொளியாகி யெழுந்தங்
குயர்நாபி யடியளவா யுறும்விரற்பன் னிரண்டே.

இ—ள்: மூலாதாரத்தில் வெண்ணிறமுள்ள நாலிதட்கமலம் இருக்கும். அதற்குமிக நடுவண்பொருந்தி வட்டித்த (பிரணவரூபமாகிய) சர்ப்பம்போல, தோன்றியிருக்கும் குண்டலியின் நடுவில் தாமரைநூல்போல் எழுபத்தீராயிரம் நாடிகளுக்கும் மூலமாகிய சுழுமுனைநாடிமத்தியில் ஹ் என்னும் அசபைமனுமின்னல்போன்ற ஒளியாகிஎழுந்து நாபியடியளவாகப் பொருந்தும். (மூலாதாரம்முதல் நாபிவரையும்) பன்னிரண்டங்குலமாம்.

மூலாதாரம் குதத்துக்கு இரண்டங்குலத்துக்குமேல் இலிங்கத்துக்கு இரண்டங்குலத்துக்குக் கீழிருக்கும். இவ்விடத்தில் முக்கோணவடிவமும், அதன்நடுவில் பிரணவாட்சரமும் வ ஶ ஷ ஸ என்னும் நான்கிதழ்க்கமலமும் இருப்பனவாம்.

மேதாகலையை ஒழித்துநின்ற ஹகாரமெய் மாத்திரத்திற்கே ஈண்டு நாபிவரையும் எனத் தானநியமங்கூறியதெனவும், மேதாகலையோடுகூடிய ஹகாரத்துக்குப் பிரமரந்திரம்வரையும் தானமாம் எனவும் அறிக. இங்கே கூறப்பட்ட ஹகாரம் மெய்மாத்திரமாகி நிற்றலின், உச்சரிக்கப்படுதல் கூடாதாதலால் வேறுகலையாகக்கொள்ளப்படாமல் பின்வரும் அகாரகலையோடு கூட்டிக்கொள்ளப்படும்.

இக்கோஷகலையின் மகிமையை,

நாபிக்குங் கீழே பன்னிரண் டங்குலந்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடிபுகுந் தானே.

(திருமந்திரம்.)

என்பதனால் அறிக. (௩)

வருநாபிக் கீழ்க்கோண மூன்றுகு நிறம்பால்
வலக்கோணத் தோங்கார மருவுமிடக் கோணி
லொருவாத ரீங்கார மாமதன்மேற் கோணத்
தொள்ளிதழா றுயமரைக் கர்ணிகையுண் ணடுவே
பொருநாடி பொருந்துமதற் கிருபுறமும் விருத்தம்
பேசியிடும் வேணுவெனப் பிரிவறும் வீணாதண்
டுருவாதி யாய்ப்பிரம ரந்திர மட்டாக
வுறுமிடக் கோணத்துதித்த வுயரிடை நாடியதும்.

இ—ள்: நாபிக்குக்கீழ் (மேனோக்கி) முக்கோணம்இருக்கும். (அதன்) நிறம் வெண்மை. வலக்கோணத்தில் ஓங்காரம்பொருந்தும். இடக் கோணில்ஹ்ரீங்காரம்பொருந்தும். அதன் மேற்கோணத்து (சுவாதிட்டா னம்) ஆறிதழ்த்தாமரையின் கர்ணிகையின்நடுவில் சுழுமுனைநாடிபொருந் தும். அதற்கு இருபக்கத்தும் வட்டம்பொருந்தும். குழல்போலப்பிரிவற்ற முள்ளெலும்புத்தொடக்கமாகப் பிரமரந்திரம்வரையும் (சுழுமுனைநாடி) பொருந்தும். எ—று.

"இடக்கோணத்துதித்தவுயரிடைநாடியதும்" என்பது வருஞ்செய் யுளிற் கூட்டிப்பொருளுரைக்கப்படும். சுவாதிட்டானம் இலிங்கமூலத்திரு க்கும். இவ்விடத்தில் அறுகோணவடிவமும், வ, ஹ, ஊ, ய, ர, ல என்னும் ஆறிழ்க்கமலமும் இருப்பனவாம். அதன் கோணத்தின்நடுவில் நகாராக்காமிருக்கும். (உ)

உற்றவலக் கோணுதித்த பிங்கலை நாடியது
மூளக்கமல முதலைந்தி லூறுவதுநீங் குவதாய்ப்
பிற்றையுமங் நாடிபுரு வமத்தியமவ் வளவாய்ப்
பிரிவுறவே வந்திரண்டு நாசியினிற் பிறங்கு
முற்றருமக் கோணத்தி லிரண்டெழுத்தி னிறந்தான்
முதிருமனற் சிகையொளியாய் மூலமுதல் நாபி
மற்றளவும் வியாத்தமநா கதசிவமா மென்பர்
வருநாபி யதன்மேலெட் டங்குலமா மனையுள்.

இ—ள்: இடக்கோணத்திலுதித்த இடைநாடியும், வலக்கோணத் துதித்த பிங்கலைநாடியும் சுழுமுனைநாடியை இச்சித்து மாறிமாறிச் சுற்றி, கோணத்தலையளவில் ஒருவளைவும், நாபியளவில் ஒருவளைவும், இருதயத் தில் ஒருவளைவும், பிடரளவில் ஒருவளைவும், நெற்றியளவில் ஒருவளைவு மாக வளைந்து, இவ்விடங்களிற் சுழுமுனைநாடியைச் சேர்வதும் நீங்குவது மாய், பின்பும் அந்நாடிகள் புருவமத்தியம்வரையும் பிரியாமல்வந்து (சுழு முனையைவிட்டு) நாசிநுதியில் தங்கும். முற்சொல்லப்பட்ட முக்கோணத் திலிருக்கும் இரண்டு அக்கரங்களின் நிறம் அக்கினிச்சுவாலைபோன்ற ஒளி யாய், மூலாதாரம் முதல் நாபிவரையும் வியாபித்திருக்கும். அநாகதசிவம் (காரணேசுரராம்) என்பர் எ—று.

"நாபியதன்மேலெட்டங்குலமாமனையுள்" என்பது வருஞ்செய்யு ளிற்கூட்டிப் பொருளுரைக்கப்படும்.

அந்தவளைவுகளுக்குப் பஞ்சக்கிரந்தி என்று பெயராம் மூலாதாரத்திலிருக்கும் முக்கோணத்தினுள்ளே வலப்புறத்தில் ஹம் எனவும் இடப்புறத்தில் ஸ: எனவும் அசபாமந்திரம் நிற்கும் எனத் தத்துவப்பிரகாசம் கூறும்.

பிராசாதசட்சுலோகீ

ஈஶாநாக்ஷாங்குலீ நீநிவாஸலவநாக்ஷவஹ்நாக்ஷரோபலவ்யேநா
ஹம்ஸா த்ர்யக்ஷணபோ விரக்ஷார நிஹோ நாம்ய் தேஜோ வேஸ்ஷிவ:॥

அ—கை: இனி மேதாகலையின் தானம், அங்குலம், நாமம், நிறம், மாத்திரை, தத்துவம், அதிபர் என்பன மூன்றாஞ்செய்யுள் நான்காமடி பிற்பாதியாலும், நான்காஞ்செய்யுளாலும் ஐந்தாஞ்செய்யுள் முதலடி முற்பாதியாலும் கூறப்படுகின்றன. (௬)

அகாரகலை நிறமுரைக்கிற் சொரிதழல்போ லொளியா
மக்கலையெங் கும்விரவி யமர்ந்திருக்கு மதுவும்
பகாதருமாத் திரைமூன்று லளவிடப்பட் டிருக்கும்
பகருமகா ரத்தில்மண் முதலறுநான் காக
நகாதசுத்த தத்துவங்க ளொடும்வியா பகமாய்
நண்ணுசடத் துவாக்களுக்கு நாயகமு மாகி
விகாதமுறும் பலபிரபஞ் சங்கடமை விரிக்கும்
வித்தான காரணமாய் விரைப்பதுமா சனத்தில்.

இ—ள்: நாபிக்குமேல் எட்டங்குல எல்லையில், அகாரகலை இருக்கும். அதன் நிறத்தைச்சொல்லின் அக்கினிச்சுவாலைபோன்ற ஒளியுடையதாம். அக்கலை எங்கும் பாவிக்கலந்திருக்கும். அதுவும் மூன்று மாத்திரையாக அளவிடப்பட்டிருக்கும் சொல்லப்பட்ட அகாரகலையில் பிருதிவிமுதல் இருபத்துநான்காகும் அசுத்த தத்துவங்களோடும் வியாபகமாய், பொருந்திய சடத்துவாக்களுக்கு நாயகருமாகி, அழிவுறுகின்ற பல பிரபஞ்சங்களைச்சிருட்டிக்கும் மூலகாரணமாய், வாசனைபொருந்திய செந்தாமரை ஆசனத்தில் பிரமா அதிபதியாய் இருப்பர் எ—று.

வருஞ்செய்யுளின் முதலடி முற்பாதி இச்செய்யுளோடுகூட்டிப் பொருளுரைக்கப்பட்டது.

ஆன்மதத்துவம் இருபத்துநான்காவன:—

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் பூதம் ௫.
சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்னும் தன்மாத்திரை ௫.
வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் கன்மேந்திரியம் ௫.
சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிகுவை, ஆக்கிராணம் என்னும் ஞானே[ந்திரியம் ௫.
மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணம் ௪.
ஆக ௨௪.

மேதாகலையோடுகூடிய ஹகாரம் நாபிக்கமலந்தொடங்கி இருதயகமலம்வரையும் வியாபித்துநிற்கும் என்பது கருத்து.

ஷட் சுலோகீ.

ஊர்த்வம் தஸ்ய விதஸ்திமாத்ர நிவஹே வேதாங்க பத்மம் ஹ்ருச்சக்ரம்।
பாலார்க்கத்யுதி ஸந்நிபம் வாஹநாத் த்ருதவிஸ்தாரி வ்யாப்தி ஸ்தா।
தத்வார்ணம் சந்த்ராப ஸாஹஸ்ரஸ்ப்ருஹ மத்யே நாயக ஸ்தாநவிந்யஸேத:।

இருதயத்திலிருக்கும் அகாரத்திலுண்டான கலைகள்-விசயை, சௌமியை, அம்சுமச்சரை, திருதி, மதனை, பந்தினி, மோசனி, மாயை, மோகினி, போதினி எனப் பத்தாம். நாபியில் மணிபூரகம் இருக்கும். இவ்விடத்தில் மூன்று வட்டவடிவமும் ட, ட, ண, த, த, த, த, ந, ப, ப என்னும் பத்திதழ்க்கமலமும் இருப்பனவாம். வட்டநடுவில் மகாராக்கரம் இருக்கும். இருதயத்தில் அநாகதமிருக்கும். அது முக்கோண வடிவமும் க, க, க, க, ங, ச, ச, ஜ, ஜ, ஞ, ட, ட என்னும் பன்னிரண்டிதழ்த்தாமரையுமாயிருக்கும். முக்கோணத்தில் சிகாராக்கரம் இருக்கும்.

ஐந்தாஞ்செய்யுள் முதலாமடி பிற்பாகம்முதல் நான்காமடி முற்பாகம்வரையும் இரசகலை கூறப்படுகின்றது. (ச)

மேவிடு நான்முகனங் கதிபதியா யிருப்பன்
மிக்கவித யாதிகண்டம் வியாபகமவ் வளவாய்த்
தாவிடுமெண் விரற்பிரமா ணத்திலுறு முகாரம்
சசிரவி கூடொளிபோற் றயங்கிடுமாத் திரைதான்
பாவிரண்டா லளவிடப்பட் டேப்புருடன் முதலாய்ப்
பகாறுதத் துவத்துடனும் பற்றுசடத் துவாக்கட்
கோவிடுமா லதிகார முதலாகி யிருப்ப
னுயர்கண்ட முதற்றுலு வங்குலமேமோர் நான்கே.

(இரசகலை என்னும்) உகாரகலை இருதயகமலம்முதல் கழுத்தளவாய் வியாபகமாம். அது எட்டங்குலப்பிரமாணத்திலிருக்கும். சந்திரசூரியர்கள்கூடும் ஒளிபோன்ற ஒளியுடையதாய் விளங்கும். இரண்டுமாத்திரையால் அளவிடப்பட்டுப்பிரகாசிக்கும். திருமால் (புருடன், அராகம், வித்தை, கலை, நியதி, காலம்) என்னும் ஆறுதத்துவங்களோடு (வியாபகமாய்) இரசகலையைப்பற்றிய சடத்துவாக்களுக்கு அதிகாரமுதல்வராகி இருப்பர்.

ஷட் சுலோகி.

கண்஠ஸ்தாநகவிக்நேஶ ஹிமாம்ஶுக தவ நஜ்யோதிர்பிந்து த்ராம்கி
த:।
ஶ்ருத்யந்தஸ்ய வதக்ஷ்வஷ்டக ஸஹிதே தாமஸ்ரீ ஸஹாயை: வடோந்।

கண்டத்திலிருக்கும் உகாரத்திலுண்டான கலைகள் குசை, மனோரமை, தீட்சை, சுதீப்தை, பரமகாரிகை, சுதூம்மிரை, பிங்கலை, பீதை, வாருணி, சீக்சிரை, அசலை, சசாங்கை, சுப்பிரபாங்கை, ஞானதை,

மோட்சதை, பரை என்னும்பதினாறுமாம். விசுத்திகண்டத்திருக்கும். இவ்விடத்தில் அறுகோணவடிவமும் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ரூ, லு, லூ, ஏ, ஐ, ஓ, ஔ, அம், அ: என்னும் பதினாறிதழ்க்கமலமும் இருப்பனவாம். அறுகோணத்தின் நடுவில் வகாராக்கரம் இருக்கும். (௫)

அ—கை: இனி ஐந்தாஞ்செய்யுளின் நான்காமடி பிற்பாகமுதல் ஆறாஞ்செய்யுள் இரண்டாமடிவரையும் விடகலையும், மூன்றாமடிமுதல் ஏழாஞ்செய்யுள் முதலாமடியின் முற்பாதிவரையும் விந்துகலையும் நிருபிக்கப்படுகின்றன.

விடகலையா மகாரநிற மின்னொளியா மாத்திரை
விளம்பியிடி லொன்றாகு மிகுமாயா தத்துவத்
துடன்மருவி யெங்கும்வியா பகமவ்வா றத்துவாவுக்
குயர்தேவ னுருத்திரனங் குவந்திருப்பன் றாலு
நடுமுதலாய்ப் புருவநடு வளவாயங் குலமு
நவில்நாலாம் விந்துநிறந் தீபமரை மாத்திரை
சுடர்பருவுஞ் சுத்தவித்தை யீசனிரு தத்துவத்
துடன்மருவி வியாபிக்கு மொளிகொளத்வாக் களுக்கே.

இ—ள்: விடகலையென்னும் மகாரகலை கண்டத்தடிதொடங்கி நாக்கடிவரையுமுள்ள நாலங்குலத்தில் இருக்கும். நிறம் மின்னொளிபோன்ற ஒளியாம். மாத்திரை ஒன்றாம். உருத்திரர் மாயாதத்துவத்துடன்சேர்ந்து எங்கும்வியாபகமாய், (மகாரகலை என்னும் வித்தியாகலையைப்பற்றிய) அவ்வாறத்துவாக்களுக்குத் தெய்வமாகி, அக்கலையில் உவந்து வீற்றிருப்பர்.

விந்துகலை நாவடிமுதல் புருவநடு அளவாய் நாலங்குலமாம். விளக்கொளிபோன்ற ஒளியுடையதும் அரைமாத்திரையுடையதுமாயிருக்கும், மகேசுரர் ஒளிபொருந்திய சுத்தவித்தை, ஈசுரம் என்னும் இருதத்துவங்களோடுசேர்ந்து வியாபகமாய், விந்துகலையிலுள்ள அத்துவாக்களுக்கு அதிபராய் இருப்பர் எ—று.

கண்டத்தினடியிற்றொடங்கி நாவடிவரையும் மகாரகலை வியாபித்து நிற்கின்றதென்பது கருத்து. தாலுத்தானத்திலிருக்கும் மகாரத்திலுண்டானகலைகள் சிரவணி, சிராவணி, செல்ப்பகரி கிராணவர்த்தனி, சுசப்தா, வாகினி, ஊர்த்துவமாலினி, பாவனி, ஆஹ்லாதினி. பிரபாவை, யோக்திரி, ரேதோபவாகினி, பிதிர்மார்க்காணுகா, தேவமார்க்கை, மார்க்கதரிசினி, அபூர்யாணி, பிராணபந்தனை, சித்தசதா, சுவித்தை, தூம்ரை, துருவை என்னும் இருபத்துநான்குமாம்.

லலாடத்திலிருக்கும் விந்துவிலுண்டானகலைகள் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி என்னும் நான்குமாம். நாவடியிற்றொடங்கிப் புருவநடுவரையும் விந்துகலை வியாபித்தது என்பது கருத்து.

ஷட் சுலோகீ.

ஜிஹ்வாயாம் வதனாரம் ஹ்ருதவிஷக்ஷேத்ராங்கிதாஸ்ராரயேக।
விஸ்ருத்வாத்ரா ஹிஜஷ்ருக்ஷவிதரவநம்ஸாயாஸஹாயம்ஹரம்॥

[illegible]
[illegible]

(௬)

அ—ரைக: ஏழாஞ்செய்யுள் முதலாமடி பிற்பாதிமுதல் மூன்றாமடி முற்பாதிவரையும் அர்த்தசந்திரகலையும், மூன்றாமடி பிற்பாகத்தாலும் நான்காமடியாலும் நிரோதிகலையும் நிருபிக்கப்படுகின்றன.

முன்னிலையாய் நீடுமகே சுரனிருப்பன் புருவ
முதலாக நெற்றியந்த மொழிமூன் றங் குலத்தில்
மன்னுமர்த்த சந்திரன்வா ளொளியாமாத் திரைகால்
வருங்கலைக ளைந்ததனிற் சடத்வாக்கள் கூடிப்
பின்னமற நிற்கையினாற் பிராசாதந் தூலப்
பெயராகு மர்த்தசந்திரன் மேன்மூன் றங் குலத்திற்
பன்னியிடு நிரோதிதிரி கோணநிறம் புகையாம்
பயில்வுறுமாத் திரையரைக்கா லாகுமெனப் பகரும்.

இ—ள்: அர்த்தசந்திரகலையானது புருவநடுமுதல் நெற்றியந்தமாகச் சொல்லப்படுகின்ற மூன்றங்குலத்தில் இருக்கும். நிறம் வாளொளி போன்றதாம். மாத்திரை காலாம். அகாரகலை, உகாரகலை, மகாரகலை, விந்துகலை, அர்த்தசந்திரகலை என்னுங்கலைகள் ஐந்து. அதனிற் சடத்துவாக்கள்கூடி வேற்றுமையின்றி நிற்றலினால், இவ்வைந்துகலைகளுந் தூலப் பிராசாதம் என்னும் பெயராம்.

விந்துகலையின்மேல் அர்த்தசந்திரகலையைப் பாவிக்க என்பதாம். அர்த்தசந்திரகலையின்மேல் மூன்றங்குலத்தில் நிரோதிகலை முக்கோணவடிவுடையதும், புகைநிறமுடையதுமாயிருக்கும். அதன்மாத்திரை (ஒன்றில்) எட்டிலொருகூறு என்று சொல்லப்படும் எ—று.

இவ்விடத்தில் பிறைவடிவமும் ஹ க்ஷ என்னும் இரண்டிதழ்க் கமலமுமாய், ஆஞ்ஞாசக்கரம் இருக்கும். பிறைவடிவின் நடுவில் யகாரக்கரமிருக்கும்.

மகாரத்தின் உச்சாரணகாலத்தின்பாதி விந்துவுக்கும், விந்துவினுச்சாரணகாலத்தின்பாதி அர்த்தசந்திரத்துக்கும், அர்த்தசந்திரகாலத்தின்பாதி நிரோதிக்கும் உச்சாரணகாலமாம் என்றுணர்க. (௭)

ஷட் சுலோகீ.

[illegible]

[illegible]

அ—ரைக: எட்டாஞ்செய்யுள் முதலாமடிமுதல் மூன்றாமடி முற்பாகம்வரை நாதகலை கூறப்படுகின்றது.

நிகழுநிரோ தியின்மேல்மூன் றங்குலத்தி னளவி
னீடியதண் டதுபோலா நாதமிரண் டருகும்
புகழுமிரு விந்துவதாம் நாதமுமா ணிக்கப்
பொங்கொளியாம் விந்துநிறம் படிகமெனப் புகல்வ
ரிகழ்வறுமாத் திரையதுமா காணியென விசைப்ப
ரிக்கலைக்கு மேற்பிரம ரந்திரமட் டாகத்
திகழ்மூன்றங் குலமதனில் நாதாந்தங் கலப்பை
சேர்வலத்து விந்துவுடன் செறியுநிற முரைப்பாம்.

இ—ள்: நிரோதி என்னும் கலையின்மேல் மூன்றங்குலமளவில் நாதகலையானது நீண்டதண்டவடிவாயிருக்கும். அதன் இரண்டருகும் இரு விந்துக்கள் பொருந்தும். நாதம் மாணிக்கரத்தினம்போன்றஒளியுடையதாயிருக்கும். விந்து பளிங்குநிறமுடையதென்று சொல்லுவர். அதன் மாத்திரை (ஒன்றில்) பதினாறிலொருகூறு என்று சொல்லுவர் எ—று.

பிரமரந்திரத்திலிருக்கும் நாதத்திலுண்டான கலைகள்:- இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகாமினி, வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை என்னும் பத்துமாம். (அ)

அ—கை: எட்டாஞ்செய்யுள் மூன்றாமடி பிற்பாகமுதல் ஒன்பதாஞ் செய்யுள் முதலாமடிவரையும் நாதாந்தகலையும், இரண்டாமடியாலும் மூன்றாமடி முற்பாகத்தாலும் அட்டகலாப்பிராசாதமும், பிற்பாகத்தாலும் நாலாமடியாலும் அர்த்தசந்திரன்முதலிய நாற்கலைகளின் தத்துவம், காரணேசுரர்களும் கூறப்படுகின்றன.

மின்னிரண்டு போலொளியாம் விந்துநிறங் கறுப்பாம்
மிகுமாத்திரை யரைமாவே யரைக்காணி யாகும்
பன்னியிடு மிம்மூன்றுஞ் சூக்குமமா முன்னம்
பகர்ந்தகலை யோரைந்தும் பரிந்திவையிற் கூடி
லன்னதனை யட்டகலாப் பிராசாத மென்ப
ரரியசதா சிவஞ்சத்தி சிவதத்துவத் தினுக்கு
மன்னுமர்த்த சந்திரனே முதற்கலைநா லினுக்கும்
வழுத்தியிடுஞ் சதாசிவத்தைக் கர்த்தாவாய்த் துதியே.

இ—ள்: நாதகலைக்குமேல் பிரமரந்திரம்வரையுமுள்ள மூன்றங்குலத்தில் நாதாந்தகலையானது வலப்பக்கத்தில் ஒரு விந்துவோடுகூடிய கலப்பைவடிவுடையதாய் விளங்கும். அது இரண்டு மின்னல்போன்ற ஒளியுடையது. விந்து கறுப்புநிறமுடையது. ஒருமாத்திரையின் முப்பத்திரண்டிலொருகூறு மாத்திரையோடுகூடியதாய் வியாபித்திருக்கும்.

நிரோதி, நாதம், நாதாந்தம் என்னும் மூன்றும் சூக்குமகலைகளாம். முன்னர்க்கூறிய மேதாகலை, இரசகலை, விடகலை, விந்துகலை, அர்த்தசந்திரகலை என்னும் ஐந்துகலையும், நிரோதி, நாதம், நாதாந்தம் என்னும் மூக்கலையோடுகூடில் அதை அட்டகலாப்பிராசாதம் என்பர். சாதாக்கியமும்,

சத்தியுமாகிய சிவதத்துவத்துக்கும், அர்த்தசந்திரம், நிரோதி, நாதம், நாதாந்தம் என்னும் நாற்கலைகளுக்கும் சதாசிவனைக் காரணேசுரனாகத் துதிக்க எ—று.

ஷட் சுலோகீ.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

தொண்ணூற்றாறங்குலமுடைய புருடபரிமாணத்திலே, பாதமுதல் மூலாதாரமுடிவாகிய நாற்பத்தெட்டங்குலமுமொழியநின்ற மூலாதாரமுதற் பிரமரந்திரமுடிவாகிய நாற்பத்தெட்டங்குலங்களுள், மூலாதாரமுதல் நாபிமுடிவாகிய பன்னிரண்டங்குலம் கோஷகலையினிடம். நாபிமுதல் இருதயகமலமுடிவாகிய எட்டங்குலம் கோஷகலையோடுகூடிய மேதாகலையினிடம். இருதயகமலமுதல் கண்டத்தினடிமுடிவாகிய எட்டங்குலம் கோஷகலை மேதாகலைகளோடுகூடிய இரசகலையினிடம். கண்டவடிமுதல் நாவடிமுடிவாகிய நாலங்குலம் கோஷ மேதா இரசகலைகளோடுகூடிய விஷகலையினிடம். நாவடிமுதல் புருவநடுமுடிவாகிய நாலங்குலம் விந்துகலையினிடம். புருவநடுமுதல் பிரமரந்திரம் முடிவாகிய பன்னிரண்டங்குலம் அர்த்தசந்திரநிரோதி நாதநாதாந்தகலைகளினிடம். இவ்வாறே மூலாதாரம்முதல் பிரமரந்திரம்வரையும் நாற்பத்தெட்டங்குலமாம். அடிமுதல் முடிகாறும் தொண்ணூற்றாறங்குல அளவாம் என்றுணர்க.

மூலாதாரத்தினின்ற குண்டலினிசத்தியிற் பிறந்ததும், ஹம்ஸ என்கின்ற அன்ன ஒலியுடையதும் சிவபீசமுமாகிய நாதம் என்னும் பெயரையுடைய ஹகாரமானது சுழுமுனைவழியாற்சென்று, மேதை முதலியகலைகளோடுகூடி வேறுபாடுடையதாகி, மீண்டு பிரமரந்திரசமீபத்திலே நாதமாகக்கேட்கப்பட்டதாகி, ஆண்டேநாதாந்தத்தன்மையைஅடைந்து, பிரமாந்திரத்தில் ஒடுங்கும் என்றறிக. (௬)

அ—கை: பத்தாஞ்செய்யுள் முதலாமடிமுதல் மூன்றாமடி முற்பாதிவரையும் சத்திகலை கூறப்படுகின்றது.

ஓங்கியிடும் பிரமரந்திரமே லோரங்கு லத்தி
 லுறுஞ்சத்தி விந்துவிடத் துறைசலப்பை போலாம்
தீங்கில்நிற மொருநூறு கதிர்ப்பிரகா சமதாந்
 திகழ்விந்து பச்சைநிறந் தீதறுமாத் திரைதா
னுங்கதைம்முந் திரிகைபதா மதன்மேலங் குலமூன்
 றதனில்வியா பினிசூல மாகும்விந்து வலமாம்
நீங்கரிய நிறமதுவோ ராயிரமா வுதிக்கு
 நிகழிரவி யொளிவிந்து நிறமிரத்த மாமே.

இ—ள்: சத்திகலை உயர்ச்சிபொருந்திய பிரமாந்திரத்தின்மேல் ஒருஅங்குலஅளவில் இருக்கும். அக்கலை இடப்பக்கத்து விந்துவோடுகூடிய

கலப்பைவடிவுபோலாம். குற்றமற்ற (கலப்பைவடிவத்தின்) நிறம் நூறுசூரியப்பிரகாசமாம். விளங்குகின்ற விந்து பச்சைநிறமுடையது. அது ஒரு மாத்திரையின் அறுபத்துநான்குகூறின் ஒரு கூறுடையது எ—று.

ஷட் சுலோகீ.

தஸ்யாத்ய த்வித்வயைகாங்க்ரமவசாத் ஸக்திகலாம் ஸாம் ஸிகா।

அ—கை: பத்தாஞ்செய்யுள் மூன்றுமடி பிற்பாகமுதல் பதினோராஞ்செய்யுள் இரண்டாமடி முற்பாகம்வரையும் வியாபினிகலையும், பிற்பாகத்தால் தசகலைப் பிராசாதமும். பின்னிரண்டடிகளாலும், பன்னிரண்டாஞ்செய்யுள் முதலாமடியாலும் சமனைகலையும் கூறப்படுகின்றன.

அகலருமாத் திரையதரைக் காணியின்கீ ழுரையா
　　மகறந்திடுங்கீழ்க் கலைகளெல்லா மமைவுடன் வியாபகமாய்ப்
புகலுதையால் வியாபினிய தென்பரிது விரண்டும்
　　போந்தகலை யிருநான்கும் பொருந்தல்தச கலையாம்
மிகலருவ வியாபினிக்கு மேனாலங் குலத்தி
　　லிருசமனை யிருகுச்சி நடுவிரண்டு விந்துப்
பகருநிற மொருகோடி சூரியர்போ லெறிக்கும்
　　பயில்விந்து நீலமுந்திரிக் கீழ்க்கால் மாத்திரையே.

இ—ள்: பிரமாந்திரத்தின் மேலுள்ள (ஓரங்குலத்தின்மேல்) மூன்றங்குலவளவிடத்திலே, வியாபினிகலையானது சூலவடிவாகும். (அதன்) வலப்பக்கத்தில் விந்துவடிவாம். (அச்சூலத்தின்) நீங்குதற்கரிய நிறமானது ஆயிரம் உதயகாலச் சூரியர்களது ஒளிபோன்ற ஒளியாம். விந்து செந்நிறமாம். மாத்திரை நூற்றிருபத்தெட்டிலொருகூறும் கீழேகூறப்பட்ட கலைகளெல்லாம் முறைமையாக வியாபகமாகச் சொல்லுகையால், வியாபினி கலை என்பர்.

(சத்திகலை, வியாபினிகலை என்னும்) இந்த இருகலைகளும் (முன்னர்க்கூறிப்) போந்த (மேதாகலை, இரசகலை, விடகலை, விந்துகலை, அர்த்தசந்திரகலை நிரோதிகலை, நாதகலை, நாதாந்தகலை என்னும்) எண்கலைகளோடும் பொருந்துகில் தசகலைப்பிராசாதமாம். சமனைகலை அருவமாகிய வியாபினிகலைக்குமேல் நாலங்குலத்தில் இருக்கும். (இதனுகிருதி) நடுஇரண்டு ரேகைகள், அதற்கு இருபக்கங்களிலும் இரண்டு விந்துக்கள். நிறம் ஒருகோடி சூரியர்கள்போன்ற பிரகாசமுடையது. ரேகையோடுசேர்ந்த விந்துக்கள் நீலநிறமாம். இருநூற்றைம்பத்தாறு கூறுகளில் ஒருகூறு மாத்திரையுடையதாம். கீழே நிச்சயப்படுத்திக்கூறிய கலைகளையும் மாத்திரைகளையும் விளங்குமாறு சமத்துவஞ்செய்கையினால் சமனையெனப் பெயராம் எ—று.

இருபக்கத்தில் இரண்டு விந்துக்களோடு கூடிய சூலவடிவுடையது வியாபினிகலையென்று பிராசாதசட்சுலோகிகூறும். சத்தி வியாபினி என்னும் இரண்டும் அதிசூக்குமகலைகளாம்.

மனத்தோடு கூடியதாதலின் சமனையெனப் பெயர்பெற்றது என்பதுமாம். மனத்தொழில்நிகழ்ச்சியுளதாந்துணையும் பாசத்தொடர்புண்டாம். மனத்தொழில் நிகழ்ச்சியடங்கியவழிப் பாசம்நீங்கிப் பரபதப்பேறுஉளதாம்.

## ஷட் சுலோகீ.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அ—கை: பன்னிரண்டாஞ்செய்யுள் பின் மூன்று அடிகளால் உன்மனகலை கூறப்படுகின்றது.

கீழ்வரைகூ றிப்போந்த கலைகளுமாத் திரையுங்
கிளர்சமத்துவஞ் செய்கையினாற் சமனையெனப் பேராம்
நீள்சமனை தனக்குமே லங்குலநா லதனி
னிகழ்ந்திடுமுன் மனைவடிவு வட்டநிற மிருளாந்
தாழ்வறுமாத் திரையதுகீ ழுரையதனைக் காலாந்
தருமிரண்டு மதிசூக்குமஞ் சாற்றிடுமுற் கலைகள்
கோள்பெறவே பொருந்திடு துவாதசநற் கலையாய்க்
கொண்டிடுவர் மேலுமகா சூக்குமத்தைக் குறிப்பாம்.

இ—ள்: சமனகலைக்குமேல் நாலங்குலத்தில் உன்மனகலையிருக்கும். வடிவு வட்டமாம் (வட்டத்தின்) நிறம் கருமையாம். ஐஞ்ஞூற்றுப்பன்னிரண்டு கூறுகளில் ஒருகூறுமாத்திரையாம். முன்னேசொல்லலப்பட்ட சத்திவியாபினிஎன்னும் இருகலைகளும் அதிசூக்குமகலைகளாம். இவ்விருகலைகளின் மேலும் மகாசூக்குமகலைகளாகிய சமனைஉன்மனைகளைக் குறிப்பாம். இவை துவாதசகலாப்பிராசாதமாகும்.

கோள்பெறவே என்பது கோளறவேஎன்றும் பாடம்.

[illegible]

## ஒடுக்கமுறை.

மூலாதாரத்திற்பிறக்கிற குண்டலினிசத்தியிற் பிறந்ததும், அசபாமந்திரவடிவானதும், இச்சாசொரூபமுடையதுமாகிய பிராணரூப சிவபீஜமாயுள்ள ஹகாரமானது ஹகாரவடிவமேயாகி நாபிக்கமலமட்டும் வியாபித்து, பின்பு மேதையோடுகூடி ஹளகாரவடிவமாகி இருதயகமலமட்டும் வியாபித்து பின்பு ஹகார ஔகார ஊகார வடிவாய்க் கண்டத்தடிமட்டும் வியாபித்து, பின்பு ஹளகார ஊகார மகார வடிவமாகி நாவடிமட்டும் வியா

பித்து, பின்பு விந்துவோடுகூடிப் புருவமத்தியமட்டும் வியாபித்து, பின்பு விந்துவின் உச்சாரணத்தின் பிற்பாதிச்சமயத்திலே அர்த்தசந்திரவடிவமாய் அதன்மேல் வியாபித்து, பின்பு விந்துவின் உச்சாரணத்தின்பிற்பாதி முடியுஞ்சமயத்திலே அதன்மேல் நிரோதிவடிவமாய் வியாபித்துநிற்கும்.

இவ்வாறே மூலாதாரத்துதித்த சூக்குமநாதமாகிய ஹகாரத்தினுடைய மந்திரசெபத்தால் அமைக்கப்பட்ட கலைகளே மேதைமுதல் நிரோதிவரையாகக்கொள்ளப்படும்.

பின்பு நிரோதிகலையின்மேலே அதிசூக்குமமாய்த், தன்னறிவாலுணரப்படுவதாயுள்ள நாதமானது மேலுள்ள நாதாந்தத்தினிடமாகிய பிரமரந்திரத்திலொடுங்கும்- நாதமொடுங்கியபின்னர் நாதாந்தகலை தன் காரணமாகிய சத்திகலையிலும், சத்திகலை வியாபினிகலையிலும், வியாபினிகலை சமனைகலையிலும், சமனைகலை உன்மனைகலையிலும் ஒடுங்கும்.

## உன்மனைகலையின் அனுபவம்.

பிருதிவிதத்துவமுதல் சிவதத்துவ முடிவாகிய முப்பத்தாறு தத்துவங்களையும் நீக்கிவிட்டு, அக்காலத்துதித்த இச்சாஞானக் கிரியைகளோடு பாரசத்தியை அடைந்து தானும் பாராசத்திவடிவமாகி, இச்சாஞானக் கிரியைகளையும் விட்டுப் பாராசத்தியோடு கூடுதலையும் சுட்டியறியாது நிற்றலுற்றுழி உன்மனைகலையின் அனுபவமுளதாம். அப்போதே பரமானந்தசொரூபமாகிய பரமசிவனைச் சாட்சாத்கரித்தலுமுளதாமென்று உணர்ந்துகொள்க.

## பன்னிருகலைகளின் சொரூபம்.

மனத்தின் வியாபாரம் அடங்கியவழி உன்மனைகலையின் அனுபவமுளதாம். அடங்கிய மனோவியாபாரத்தைஉடைய ஆன்மாவிற்கு மீண்டும் மனோவியாபாரந்தோன்றியவழி சமனைகலையின் அனுபவமாம். மனம் பலவிதமாக வியாபிக்கும்போது வியாபினிகலையின் அனுபவமாம். மந்திரமுச்சரிக்க முயலுதற்குச் சாமர்த்தியம் உளதாகும்போது சத்திகலையின் அனுபவமாம். நாதந்தொடங்கும்போது நாதாந்தகலையின் அனுபவமாம். நிருவிகற்பவடிவாக மந்திரமுடியுங்காலைக் கேட்கப்படுஞ்சத்தத்தை அறியும்போது நாதகலையின் அனுபவமாம். விந்துச்சாரணத்தின் மூன்றுங்கூற்றை உச்சரிக்கும்போது நிரோதிகலையின்அனுபவமாம். விந்துவின் பிற்பாதியை உச்சரிக்கும்போது அர்த்தசந்திரகலையின் அனுபவமாம். விடகலையின் மேலுச்சரிக்கப்பட்ட விந்துவைக்குறித்தறியும்போது விந்துகலையின் அனுபவமாம். மகாரம்உச்சரிக்கும்போது விடகலையின் அனுபவமாம். ஊகாரம் உச்சரிக்கும்போது இரசகலையின் அனுபவமாம். ஔகாரமுச்சரிக்கும்போது மேதாகலையின் அனுபவமாம், இதுவே சிருட்டிக்கிரமம்.

மனத்தைத் தம்முள் அடக்கிய ஆன்மதத்துவம் இருபத்துநான்கையும், அவற்றின் மேம்பட்ட வித்தியாதத்துவம் ஏழையும், சிவதத்துவம் ஐந்தையும், இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி, ஆதிசத்தி என்னுஞ் சத்திகளையுங்கடந்துநின்ற பாராசத்தியானது மனத்தைக்கடந்தது என்னும் பொருளுடைய உன்மனை என்னும் பெயர்பெற்றவாறு எங்ஙனம் எனிற் கூறுதும்:—

ஞானசத்தி சிவதத்துவத்தையும், சுத்தவித்தியாதத்துவத்தையும், கிரியாசத்தி சத்திதத்துவத்தையும், சாதாக்கியதத்துவத்தையும், இச்சாசத்தி ஈசுரதத்துவத்தையுஞ்செலுத்திக் காரியப்படுத்தும். அவற்றுட் சிவதத்துவம் பிரகிருதியையும், சத்திதத்துவம் கலை காலங்களையும், சாதாக்கியதத்துவம் நியதிபுருஷதத்துவங்களையும், ஈசுரதத்துவம் அராகத்தையும், சுத்தவித்தியாதத்துவம் வித்தையையுஞ்செலுத்தும். ராகம் மனத்தையும், வித்தை புத்தியையும், கலை அகங்காரத்தையுஞ் செலுத்திச் சேட்டிப்பிக்கும். மனம், புத்தி, அகங்காரம் என்னுந் தத்துவங்களின் கூட்டத்தால் ஆத்துமதத்துவ வியாபாரம் நிகழும். ஆதலால் எல்லாத்தத்துவங்களும் இச்சாஞானக்கிரியாசத்திகளின் காரியமாம். அவற்றுள் மனம், இச்சாசத்திசொரூபமுடையதாயிருக்கும். பராசத்தியின் ஆயிரத்தொருகூற்றின் ஆதிசத்தியும், ஆதிசத்தியின் ஆயிரத்தொருகூற்றில் இச்சாசத்தியும், இச்சாசத்தியில் ஆயிரத்தொருகூற்றில் ஞானசத்தியும், ஞானசத்தியின் ஆயிரத்தொருகூற்றில் கிரியாசத்தியும் பிறக்கும் என்னும் வசனத்தால் இச்சாசத்தியே ஞானக்கிரியைகளுக்குக் காரணமாம். காரணமாகிய இச்சாசத்தி அடங்கியவழிக் காரியமாகிய கிரியாஞானங்களும் அடங்கும். அற்றேல் ஞானமின்றி இச்சைசேட்டிக்குமோ எனின்; அங்ஙனமன்று. ஞானத்தோடு இச்சை கிரியைகளும், கிரியையோடு ஞான இச்சைகளும், விரவி உள்ளடங்கிநிற்கும் என்று ஆகமங்கள் கூறுதலால் ஞானம் இன்றி இச்சை நிற்பதே இல்லை. ஆயினும் பராசத்தி சன்னிதானத்தினின்று முன்னர் இச்சையும், பின்னர் ஞானமும், பின்னர்க் கிரியையுந்தோன்றும் என்றும் அவை தனித்தனி சேட்டிக்கும் எனவும் கூறியது தலைமைபற்றியவழக்கால் எனக்கொள்க.

ஆதலால் இச்சாசத்திவடிவாகிய மனம் அடங்கியவழி எல்லாத்தத்துவமும் அடங்குதல்கூடும் என்னும் நியாயம்பற்றி எல்லாத்தத்துவங்களையுங்கடந்த பராசத்தியை உன்மனை என்று கூறியதும், உன்மனை முடிவிற் பரமசிவன் எனக்கூறியதும் அமையும் என்க. (௧௨)

அ—கை: வியோமரூபை முதலியநாற்கலைகள் பதின்மூன்றும் பதினான்காஞ் செய்யுட்களாற் கூறப்படுகின்றன.

சொற்றிடு சூளிகமா வுன்மனைப் பிரத்தா ரத்திற்
சூழ்ந்திடுநால் விந்துவுக்குந் தொகுநாமஞ் சொல்லில்
விற்றருநல் வியோமரூ பையநந்தை யனாதை
மேவுமநா சிருதையென் றுன்னுகலை நாலாம்
மற்றதனில் வியோமரூ பிஞானா காய
மாயிருக்கு மென்றபடி மருவியிடு மநந்தை
வுற்றயன்மா லுருத்திரர்க்கு மளவிடவொண் ணாதா
மொளிகொளநா தையுமதற்கோர் முதலிலையென் றதுவே.

இ—ள்: முதன்மையாகிய உன்மனைப்பிரத்தாரத்திற் சூழ்ந்துள்ள நான்கு விந்துக்களுக்குந் தொகுதியான நாமங்களைச் சொல்லுகில் வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை என மனமிறந்து தியானிக்கப்படும் கலைநான்காம். அவைகளுள் வியோமரூபினி ஞானாகாயமாயிருக்கும்.

அதனைச்சேர்ந்த அநந்தை பிரமவிட்டுணு உருத்திரர்களுக்கும் அளவிடுதற் கரிதாயிருக்கும். அநாதையும் தனக்கோர் முதலில்லாததுஎன்று சொல்லப் பட்டது எ—று.

பிரத்தாரம்என்பது கலைகளின் வரிவடிவம். (க௫)

அநாசிருதை யென்றதுமுன் கலைகளினுந் தேக
மாதிபிர பஞ்சத்துந் தோன்றியிடு மதுவா
மனுதிகளுக் கணுகாத ஞானகா யமுமேல்
வள்ர்ஞான சமுத்திரமே ஞானதருப் பணமும்
பனுதிசாற் காலத்தி லொருநூறு யிரமாய்ப்
பகர்கோடி யிந்துவொளிப் பரப்பெனவும் வகுப்பர்
தனுதுகலை நாலுமதி சூக்குமப்பிரா சாதந்
தானுமுற் கலைபொருந்திற் சோடசமாய்ச் சாற்றும்.

இ—ள்: அநாசிருதை முற்கலைகளிலும் உடம்பு முதலிய பிரபஞ்சத்துந் தோன்றிநிற்பதாம். வியோமரூபை மனம், வாக்கு, காயங்களுக்கெட்டாத ஞானாகாயம்போன்ற ஒளியுடையது. அநந்தை ஞானசமுத்திரம் போன்றஒளியுடையது. அநாதை ஞானதருப்பணம்போன்றஒளியுடையது. அநாசிருதை சாற்காலத்துதிக்கும் நூறுயிரகோடிசந்திரர்களது ஒளிபோன்றது எனவுஞ்சொல்லுவர். வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதைஎன்னும் நாற்கலைகளும் அதிசூக்குமப்பிராசாதமாம். முற்கூறப்பட்ட பன்னிருகலைகளும் இந்நாற்கலைகளோடுபொருந்தில் சோடசகலாப்பிராசாதம் என்று சொல்லப்படும் எ—று.

வியாபினி, வியோமரூபை, அநர்தை, அநாதை, அநாசிருதை என்பன பரநாதபேத அபரநாதத்தைநடத்துவன. பரமசிவத்தின் ஆயிரத்தொருகூறுவலியுடையஅவதாரம்அநாசிருதர். அவரைப்பிரியாதசத்தி அநாசிருதை இவர்பரையை அதிட்டிக்கையால் பரனென்றும் பெயர்பெற்று, தாம் ஒருவரை ஆசரியாதபடியால் அநாசிருதராய்த் தமக்கவதாரமானபரையும் அநாசிருதையானது. அநாசிருதரைக் கிழக்குத் தெற்கு வடக்கு மேற்கு என்னுந் திசையிலே அநாதர், அநந்தர், வியோமரூபர், வியாபகர்என்னும் இவர்கள் நால்வரும் அநாதை, அனந்தை, வியோமரூபை, வியாபினிஎன்னும் அனுக்கிரகசத்திகளோடுகூடித் தோத்திரம்பண்ணிக்கொண்டிருப்பார்கள். அநாதை என்னுஞ்சத்தி அநாதருக்குக்காரணமாய்க் கிரியாசத்தியுமாம் என்று சொல்வர். அநந்தை என்னுஞ்சத்தி அநந்தருக்குக்காரணமுமாய் அறிவைத் தரும் ஞானசத்தியுமாம் என்றுவிளம்புவர். வியோமரூபை என்னுஞ்சத்தி வியோமரூபருக்குக் காரணமுமாய்க் கிருபைமிகுந்த இச்சாசத்தியுமாம் என்று உரைப்பர்.

வியாபினி என்னுஞ்சத்தி வியாபகருக்குக்காரணமாய் ஆன்மஅனுக்கிரகமான ஆதிசத்தியுமாம் என்றும் திரோதானசத்தியுமாம்என்றும் ஓதுவார்கள். அநாசிருதைமுதலான பஞ்சசத்திகளும் சாந்தியதீதைமுதலான கலைகளைப் பிரேரிக்கையால், அச்சத்திகளை பஞ்சகலைகளென்றும் கூறுவர்.

அ—ரை: பிராசாதத்தை ஆசாரியனிடம்அறிந்து உச்சரிக்குமுறை கூறப்படுகின்றது.

மூலாதா ரம்முதலாய்ப் பன்னிரண்டு கலையில்
முறைமையதா யுள்ளடங்கும் பிராசாத மனுவை
மேலான பரமாசா ரியனாலே கண்டு
விளம்பிடுமாத் திரைபேதங் களையுமிக வறிந்து
மாலாற வுச்சரிக்கு மிடத்துமுற்சொன் மூலம்
வரும்பிரம நாடியதின் மத்தியத்தி னின்றுங்
காலாக மேற்றுவாத சாந்தவரை நிற்குங்
கருதருசூ னியமாறுங் காரணத்தியா கமதும்.

இ—ள்: மூலாதாரம்முதல் (துவாதசாந்தம்வரையுமுள்ள) பன்னிரண்டுகலைகளில் முறைப்படி உள்ளேயடங்கியிருக்கும் பிராசாதமந்திரத்தைப் பரமாசாரியரால் அறிந்து, அவ்வக்கலைகளுக்குக் கூறப்படும் மாத்திரைபேதங்களையும், நினைத்தற்கும்அரிய ஆறுசூனியங்களையும், பிரமாதிகாரணேசுரர்களைத் தியாகஞ்செய்யுமுறைமைகளையும் மிகவும் அறிந்து, மயக்கம்நீங்கும்பொருட்டு உச்சரிக்குமிடத்து, முற்கூறப்பட்ட மூலமனுவானது சுழுமுனாநாடியின் மத்தியினின்றும்வழியாகத் துவாதசாந்தம்வரைநிற்கும் எ-று.

சுத்தாவத்தை இரு விருத்தங்களினால் கூறப்படுகின்றது.

யோகமதாய் விடுங்கன்ம மத்தனையு முணர்ந்தங்
குச்சரிக்கு மிடத்தகர முதன்மூன்றக் கரத்தைப்
பாகமதா யுச்சரிக்கு மிடம்பரம சாக்கிரம்
பகர்விந்து வினிலூன்ற லதுபரம சொப்பனம்
மாகமுறு மர்த்தசந்திரன் முதல்நாதம் நாலில்
வந்துறுத லதுபரம சுழுத்தியதாஞ் சத்தி
சேகறுவியா பினிசமனை யுன்மனையாஞ் சத்தி
செறிகலைநா லினும்பரம்பிக் கூடியதே துரியம்.

இ—ள்: யோகமார்க்கத்தால் விடுகின்ற கன்மங்களெல்லாவற்றையும்அறிந்து உச்சரிக்கும்போது, அகாரம், உகாரம், மகாரம்என்னும் மூன்றக்காரங்களையும் பகுதியாய் உச்சரிக்குமிடம் பரமசாக்கிரம். விந்துவைப்பற்றுதல் பரமசொப்பனம், அர்த்தசந்திரம், நிரோதி, நாதம், நாதாந்தம்என்னும் நாதகலை நான்கிலும் வந்து பொருந்துதல் பரமசுழுத்தியாம். சத்தி, வியாபினி, சமனை, உன்மனைஎன்னுஞ் சத்திகலைநான்கிலும் பரந்துகூடுவதே துரியமாம். எ—று.

"யோகமதாய்விடுங்கன்ம மத்தனையுமுணர்ந்து" என்பதனை சோடசகலாப்பிராசாதசட்கத்திற்கூறி ஆங்குவிளக்கிக்காட்டுவாம்:—

மூலாதாரத்திலுள்ள ஓங்காரத்திற்கும் அசபைக்குமாக ஆகாமியமலம் அரும்பும். அகாரகலைக்கும், உகாரகலைக்கும் பிரகிருதிமாயை பொருந்திநிற்கும். மகாரகலைக்கும், விந்துகலைக்கும் அசுத்தமாயை பொருந்திநிற்

பொது சன நூல் நிலையம்
உப அலுவலகம்
அனலைதீவு



கும். அர்த்தசந்திரகலைக்கும், நிரோதிகலைக்கும் சுத்தமாயாகாரியமான மாயையம்பொருந்திநிற்கும். நாதகலைக்கும், நாதாந்தகலைக்கும் சுத்தமாயை பொருந்திநிற்கும். சத்திகலைக்கும், வியாபினிகலைக்கும் திரோதமலம்பொருந்திநிற்கும். சமனைக்கும் உன்மனைக்கும் ஆணவமலம் பொருந்திநிற்கும்.

மூலாதாரத்திலிருந்து விளங்கும் ஓங்காரத்திற்கும் அசபைக்கும் பிரதானமான காமியமலம் சோதிக்கும்போது தாவரயோனி பத்தொன்பது லக்ஷமும் சோதனைப்படும். அகாரமும், உகாரமும் ஊர்வனவானயோனிகள் பதினைந்துலக்கமும் பிரகிருதிமலத்துடனே சோதனைப்படும். மகாரமும், விந்துவும் நீர்வாழ்சாதியான யோனி பத்துநூறாயிரமும் அசுத்தமாயையுடனே சோதனைப்படும். அர்த்தசந்திரனும் நிரோதியும் பறவையானயோனி பத்துநூறாயிரமும் சுத்தமாயாகாரியமான மாயேயத்துடன் சோதனைப்படும். நாதமும், நாதாந்தமும் நாற்கால்விலங்கு பத்துநூறாயிரயோனியும் சுத்தமாயையுடன் சோதனைப்படும். சத்தி வியாபினி என்னுங் கலைகளும் மானிடயோனி ஒன்பதுநூறாயிரமும் திரோதானமலத்துடனே சோதனைப்படும். சமனையும், உன்மனையும் தேவயோனி பதினொருநூறாயிரமும் ஆணவமலத்துடனே சோதனைப்படும் என்றறிந்துகொள்க. (௧௬)

பிறிவிலரும் வியோமரூபினியனந்தை யனாதை
பேசுமநா சிருதையெனும் நாலுசிவ கலையில்
மறுவறவே ஞானசத்தி யிடமாக வொடுங்கில்
வருட்பரமா தீதமதா மைந்தவத்தை விளைய
நெறிதிகழு முன்மனையி னந்தியத்தி லநாதி
நிகழ்த்துசிவ மகாகற்பத் தொருகோடி யிரவி
செறிகதிர்போல் விளங்கிடுவ ரவ்வொளியைக் காணுந்
திறமதனை யுரைத்திடுவன் சிவாகமத்தின் படியே.

இ—ள்: வியோமரூபினி, அநந்தை, அநாதை, அநாசிருதை என்னுஞ் சிவகலைநால்ல் ஞானசத்திவாயிலாகஒடுங்கில் துரியாதீதம் வருவதாம். ஐந்தவத்தை முதிர்ச்சியினால் உன்மனையின் முடிவில் அநாதிகருத்தாவாகிய சிவம் மகாகற்பகாலத்திலேவரும் ஒருகோடிசூரியர்களதுஒளிபோல விளங்குவார். அச் சிவபரஞ்சுடரைக் காணும்மார்க்கத்தைச் சிவாகமத்திற்கூறிய படிசொல்வாம். (௧௭)

சுத்தாவத்தை ஐந்தும் சித்தாந்தசாராவளியில் கூறப்படுகின்றன.

பீஜஸ்யோத்வாரணஞ்ஜாக்ரம் ஸ்வப்நோவிந்து ப்ரவிஸ்த்ருதஹ:।
ஸுஷுப்திர்நாதயோகஸ்து துரீயம்ஶக்திஸம்ஜ்ஞகம்। துரீயா
தீதம்ஶயம்ஶாந்தம்வபுரேவஹிஶைவஸ்ய இதி।

நின்மலாவத்தை நீங்கும்வகை
இருசெய்யுட்களால் கூறப்படுகின்றது.

நின்மலமா மைந்தவத்தை நீங்கும்வகை யுரைக்கில்
நிகழுமகா ரமுமனமு மிந்திரியமீ ரைந்துஞ்
சொன்மையதா மிதயமதிற் கிரியாசத் தியினாற்
றுகளறநீங் கிக்காண்டல் நின்மலசாக் கிரமாம்
வன்மையுறு முகாரமொடு புத்தியுமாத் திரைகள்
வருபத்துங் கண்டத்தில் ஞானசத்தி யாலே
புன்மையற நீங்கிக்கண் டிடலேசொப் பனமாம்
புகலுமகா ரத்தினுட னாங்கார மதுவும்,

இ—ள்: நின்மலாவத்தை ஐந்தும் நீங்கும்வகையைச் சொல்லுகில் அகாரமும், மனமும், ஞானேந்திரியம் கருமேந்திரியம் என்னும் பத்து இந்திரியங்களும் இருதயத்தில் கிரியாசத்தியினால் நீங்கிக் காண்டல் நின்மலசாக்கிரமாம். உகாரமும் புத்தியும் தன்மாத்திரைகள் பத்தும் கழுத்தில் ஞானசத்தியாலேநீங்கப்பெற்றுத் தரிசித்தல் நின்மலசொப்பனமாம் எ-று.

"மகாரத்தினுடனாங்காரமதுவும்" என்பது வருஞ்செய்யுளோடுகூட்டிப் பொருளுரைக்கப்படும்.

ஞானேந்திரியம்: சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிகுவை, ஆக்கிராணம் ஞ.
கன்மேந்திரியம்: வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் ... ஞ.
தன்மாத்திரை: சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் ... ஞ.

தன்மாத்திரைகள் போகரூபமாய்ப் புறத்தேஇருப்பனவும் தேகரூபமாய் அகத்தேஇருப்பனவும் என இருதிறப்படும். புறத்தேஇருக்குந் தன்மாத்திரைகள் ஞானேந்திரியங்களின் விடயமாயுள்ளன. அகத்தேஇருக்குந் தன்மாத்திரைகள் சூக்குமதேகமாயுள்ளன. இவ்வேற்றுமைபற்றியே ஆசிரியர் தன்மாத்திரை பத்தெனக் கூறினர் என்க. (கஅ)

அடிநாவி லிச்சாசத் தியினாலே நீங்கி
யவ்வொளியைக் கூடுகின்ற வவதரமே சுழுத்தி
வடிவான விந்துவுஞ்சித் தமும்புருவ நடுவில்
மன்னுதிரோ தானசத்தி யதனாலே மறித்து
நெடிதாக வதிற்கூடிக் கலத்தலது துரியம்
நிகழ்நாத முளத்தொடு பிரமரந்திர மீதி
லடியான பரையாலே நீங்கியதிற் கலத்த
லறிவுமிகக் கெடுவதுநின் மலதுரியா தீதம்.

இ—ள்: மகாரமும் அகங்காரமும் நாவடியில் இச்சாசத்திவாயிலாக நீங்கி, அவ்வொளியைக் கூடுகின்றசமயம் நின்மலசுழுத்தி. விந்துவும் சித்தமும் புருவமத்தியில் திரோதானசத்தியினாலே தடுத்து, மிகஅவ்வொளி

யிற்கலத்தல் நின்மலதுரியம். நாதமும் உள்ளமும் பிரமாந்திரத்தின்மேல் முதலான பராசத்தியாலேநீங்கி, அவ்வொளியிற் கலத்தலினால் மனமிறந்து நிற்றல் நின்மலதுரியாதீதம்.

நின்மலசாக்கிரம், நின்மலசொப்பனம், நின்மலசுழுத்தி, நின்மல துரியம், நின்மலதுரியாதீதம் என்னும் ஐந்தும் முறையே சீவன்முத்தி, அதிகாரமுத்தி, போகமுத்தி, லயமுத்தி, பரமுத்தி எனவும் கூறப்படும். சீவன்முத்தியாவது சிவத்தன்மைவிடபெடுதல். அதிகாரமுத்தியாவது அதி காரசிவத்தையடைந்து உடற்பற்றை விடுதல், சகலவர்க்கத்தான்மாக்களு க்கு அதிகாரசிவம் குருவேயாகும். போகமுத்தியாவது போகசிவத்தைய டைந்து உலகப்பற்றைவிடுதல். சகலவர்க்கத்தான்மாக்களுக்குப் போகசிவம் பதியேயாம். அப்பதியைப் பதிஞானத்தாலடைந்து உலகத்துள்ள போகத் தைவிடுதலே போகமுத்தியாம். இலயமுத்தியாவது, இலயசிவத்தையடை ந்து மலமாயாகன்மங்களை விடுதல். சகலவருக்கத்தான்மாக்களுக்கு இலய சிவம் தற்போதம் அடங்கினவிடத்தில் எசனுப்பிரகாசிப்பதேயாம். பரமு த்தியாவது பரசிவத்தையடைந்து பாசப்பற்றைவிடுதல்.

நிர்விகாரியாக்கல் நின்மலசாக்கிரம், தன்வண்ணமாகச்செய்தல் நி ன்மலசொப்பனம், தன்னோடொப்பச்செய்தல் நின்மலசுழுத்தி. அடங்கி நிற்கச்செய்தல் நின்மலதுரியம், ஆனந்தசொரூபமாய் நிற்கச்செய்தல் நின் மலதுரியாதீதம். (கக)

சிவதரிசனம் கூறப்படுகின்றது.

இவ்விடத்திற் றன்னதுஞா துருஞான ஞேய
மிவைவநாடா துன்மனைக்கு மப்பாலா யிருக்கும்
செவ்வியபூ ரணஞானா னந்தத்தைப் பெறுதல்
திகழ்சுவாநு பூதியெனு மான்மலா பமதா
மவ்விதியின் படியேசோ டசகலைக ளெல்லா
மருஞ்சோபா னமதாக வகற்றியதன் முடிவிற்
றிவ்வியமாம் பரவத்துத் தெரிசனம தென்னத்
தெரித்தபிரா சாதத்திற் சடத்துவாக்க டனினும்.

இ—ள்: (மனமிறந்து தியானிக்கும்) இவ்விடத்திலே தன்னுடைய ஞாதுரு ஞானம் ஞேயம் என்னும் இவைபொருந்தாது உன்மனைகலைக்கும் மேலிருக்கும் ஞானானந்தப்பொருளை அடைதல் விளங்குகின்ற சுவானுபூதி என்று சொல்லப்படும் ஆன்மலாபமாம். அவ்விதிப்படியே சோடசகலைகள் முழுவதையும் அரிய படிவரிசையாக அகற்றி, அவ்வுன்மனையின் முடிவில் தைவிகமாகிய பரம்பொருளாகும் சிவதரிசனமாகுமென்று (ஆகமங்கள்) தெரிவித்தன. பிராசாதத்தைப்போலவே சடத்துவாக்களின் முடிவிலும் சிவதரிசனம் என்று ஆகமங்கள் தெரிவித்தன.

சிவபெருமான் காண்பான் காட்சி காட்சிப்பொருள்என்னும் மூன் றையுங்காட்டுபவர். காண்பான்—ஞாதிரு, காட்சி—ஞானம், காட்சிப்பொ ருள்—ஞேயம். விடயங்களின் வழியே செல்லாவண்ணம் மனத்தை நிறுத் திச் சிவத்தைத்தியானிக்கப்புகுந்தவழி, ஞாதிருவாகிய தானும் ஞானமாகிய

தியானமுந்தோன்றாது ஞேயமாகிய சிவமொன்றே விளங்கப்பெறுவது யோகமேயாக, சன்மார்க்கமாகிய நெறியாவது யாதெனில்; பதி பசு பாசங்களின் தடத்தலக்கணங்களையும் அவற்றுள் பசு பாசங்கள்நீங்கிய பதியின் சொரூபலக்கணத்தையும் உணர்த்துவதாகிய ஞானசாத்திரங்களைத் தானாக ஓதியும், ஆசிரியனிடத்தே கேட்டும், கேட்டவாறு சிந்தித்தும், சிந்தித்தலிற் காணப்படும் காண்பான் காட்சி காட்சிப்பொருளாகிய சவிகற்ப ஞானத்தையுங்கடந்து, அம்மூன்றுமின்றி அத்துவிதமாய் இயைந்த அகண்டாகார சச்சிதானந்தப்பிழம்பாகிய சிவபெருமான்மாட்டு நிருவிகற்ப ஞானத்தாற் செய்யும் வழிபாடாம். இதனை அனுட்டித்தோர் சிவசாயுச்சியமாகிய பரமுத்தியைப்பெறுவர். அது,

"நன்மார்க்கஞானத்தை நாடிஞான ஞேயமொடுஞாதிருவு நாடாவண்ணம், பின்மார்க்கச்சிவனுடனும் பெற்றிஞானப் பெருமையுடையோர்சிவனைப்பெறுவர்காணே" எனச்சித்தியார் அ-ம் சூத்திரம், உ-ம் அதிகரணம், உஉ-ம் செய்யுள் கூறுமாற்றானுணர்க.

சுவாநுபூதி என்பது சுவ அநுபூதி எனப் பிரித்துரைக்கப்படும். சுவ என்னும்மொழிக்குத் தன்என்பது பொருள். சுவாநுபூதி தான் அனுபவிப்பது. ஆன்மலாபமாவது சிவரூபமாகிய ஞேயத்தில் அழுந்துதலாம்.

இதன்விரிவைச் சிவப்பிரகாசம் பத்தாஞ் சூத்திரத்துட்காண்க. ()

அ—கை: உஉம்செய்யுளாலும், உஙம்செய்யுள் முதல் இரண்டு அடிகளாலும் இருபதுகலைப்பிராசாதம் கூறப்படுகின்றது.

ஆதியகார முகார மகாரம் விந்து
 வர்த்தசந் திரநிரோதி நாதநா தாந்தஞ்
சோதில்சத் திவியாபினி யேவியோம ரூபை
 குலவநந்தை யனாதையனா சிருதையுடன் சமனை
நீதமுறு சமனாந்த முன்மனையி னாந்த
 நிறைபரையப் பராந்தமுட னீடுசிவ மந்தம்
பேதமுறு சமனையுடன் சமனாந்த மாகப்
 பேசுமவற் றுட்சமனாந் தஞ்சமனை யிறங்கும்.

இ—ள்: முதற்கலையாகிய அகாரம், உகாரம், மகாரம், விந்து, அர்த்தசந்திரம், நிரோதி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, சமனாந்தம், உன்மனை, உன்மனாந்தம், பரை, பராந்தம், சிவமந்தம் (என்பன இருபதுகலைப்பிராசாதமாம்.) சமனையோடு சமனாந்தமாகச் சொல்லப்பட்ட அவற்றுள் சமனாந்தம் சமனையில் வெளிப்பட்டுநிற்கும் எ—று. (உஉ.)

அ—கை: இருபத்துமூன்றாம் செய்யுள் பின் இரண்டடிகளால் பஞ்சகலைகள் கூறப்படுகின்றன.

உன்னிடுமுன் மனாந்தமுன் மனையதனி லொடுங்கு
 மோதுபராந்த மப்பரையி லுறுஞ்சமனாந் தந்தான்
மன்னுசம னங்களிலு மடங்கிநின்ற கலைகள்
 மருவிடுநா லைந்தாக மதித்திடுவ ரவற்றுள்

முன்னுரைத்த வகாரவுகார மகாரம் விந்து
மொழியர்த்த சந்திரனென் னுங்கலைகள் முறையே
சொன்னநிவிர்த் தாதிபஞ்ச கலையெனப்பேர் பெற்றுச்
சொல்லுமேதை யருக்கீசம் விடவிந்துக் கலையே.

இ—ள்: உன்மனாந்தம் உன்மனியிலொடுங்கும். பராந்தம் பரையிற் பொருந்தும். சரணாந்தந் திருவடிகளும் அடங்க நின்ற கலைகள் இருபதாக நிச்சயிப்பார்கள். அவ்விருபதுகலைப்பிராசாதத்தினுள் முற்சொல்லப்பட்ட அகாரம், உகாரம், மகாரம், விந்து, அர்த்தசந்திரன் என்னும் (ஐந்து) கலைகளும் முறையாக, நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் பஞ்சகலைஎன நாமத்தைப்பொருந்தி, முற்சொல்லப்பட்ட மேதாகலை, அருக்கீசகலை, விஷகலை, விந்துகலை, அர்த்தசந்திரகலை எனவும் பெயரைப் பொருந்திநிற்கும்.

அடுத்தசெய்யுளில் வரும் "அருத்தசந்திரனெனவும் பெயராகிநிற்கும்" என்பது இங்கேகூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. (௨௯)

அ—ணக: பஞ்சாக்கரமும் அத்துவாக்களின் தோற்றமும் முதலாமடி பிற்பாகமுதல் இருசெய்யுட்களால் கூறப்படுகின்றன.

அருத்தசந் திரனெனவும் பெயராகி நிற்கு
மக்கலைரூ பங்களிலே யடங்குமெழுத் தறையில்
விரித்தவகா ரத்திலே நகாரமுகா ரத்தில்
மேவுமகா ரமதாகு மகாரத்திற் சிகாரம்
திருத்தமிகு விந்துவிலே வகாரமு நாதத்திற்
செறியகா ரமதாகச் செப்பிடுமிங் கிவற்றுட்
பெருத்தநகா ரத்திலிரு நூற்றிருபா னன்கு
பிறிவிலரும் புவனத்துவாப் பிறந்திடுமென் றுணரே.

இ—ள்: அகாரமுதலிய அப்பஞ்சகலைகளின் ரூபங்களில் அடங்கிய எழுத்துக்களைச் சொல்லுகில், அகாரகலையில் நகாரமும், உகாரகலையில் மகாரமும், மகாரகலையில் சிகாரமும், விந்துகலையில் வகாரமும், நாதகலையில் யகாரமுமாகப் (பஞ்சாக்கரம் பிரணவகலையில் அடங்கியதெனச்) சொல்லப்படும். இங்கே கூறப்பட்ட ஐந்தெழுத்துக்களுள், நகாரத்தில் இருநூற்றிருபத்துநான்கு புவனத்துவாத்தோன்றும் என்றறிக.

பஞ்சாக்கரம் தூலம், சூக்குமம், காரணம் எனமூவகைப்படும். தூலபஞ்சாக்கரமாவது நகாரத்தை முதலாகக்கொண்டு செபிப்பது. அது உலகஇன்பத்திற் பற்றறாத உபாயமார்க்கத்தாற்குரியதும், அவர்கள் உண்மைமார்க்கப்பிரவேசஞ்செய்தற்கு ஏதுவாயுள்ளதுமாம். உண்மைமார்க்கத்தார் நகாராதிபஞ்சாக்கரத்தைச் செபிப்பார்களாயின், ஞானவளர்ச்சியை அடையமாட்டார்கள். ஆகையால் அவர்கள் சூக்குமபஞ்சாக்கரத்தையே செபித்தல் வேண்டும். சூக்குமபஞ்சாக்கரமாவது நகாராதிபஞ்சாக்கரத்தில் நகாரமகாரங்களினுடைய இடத்தைச் சிகாரவகாரமெடுக்க, நகாரமகாரங்களைப் பின்னுக்கச் சிகாராதிபஞ்சாக்கரமாம். சிகாரத்தை முதலாகவைத்துச் செபிப்ப

வர்களைக் கன்மம்பற்றாது. அது ஆணவமலமாகிய சமுத்திரத்தைக்கடப்பதற்குத் தெப்பமாகஇருக்கும். சிகாரம் சிவத்தையும், வகாரம் திருவருட்சத்தியையும், யகாரம் ஆன்மாவையும், நகாரம் திரோதானசத்தியையும், மகாரம் மலத்தையுங் குறிக்கும்.

சிவமும் அருளும் ஒருபாலும் திரோதமும் மலமும் ஒருபாலும்நிற்க, நடுநின்ற ஆன்மா அருளறிவித்தால் அறிந்தும் மலம் மறைத்தால் மறைப்புண்டும் இரண்டோடுங்கூடி அதுவதுவாய்நிற்கும். திரோதானசத்தி மலத்தைச்சார மலம் முயற்சிசெய்ய, அதனால்மறைப்புண்டுகிடந்தஆன்மா சிகாராதி பஞ்சாக்கரத்தைச்செபிக்க, மலத்தில் வலிகுன்றிச் சிறிது சிறிதாகத்தேயும். அப்போது திரோதானசத்தி தன்திரோதகிருத்தியத்தைவிடுத்து, அருளாகநின்றுபிரகாசிக்கும். பின்பு ஆன்மாவிற்குச் சிவனைச்சார்தல்வேண்டும் என்னும் விருப்பம்உண்டாம். உண்டாகவே சிவபெருமான் ஞானாசாரியனை அதிட்டித்து, முத்திபஞ்சாக்கரத்தை உபதேசிப்பர். அப்போது ஆன்மபோதம்நீங்கிச் சிவபோதம்விளங்கிச் சத்தியோடும் சிவத்தோடும் கூடிநிற்க, ஐந்தெழுத்து மூன்றெழுத்தாகும். பின்பு வகாரமாகிய சத்தி சிகாரமாகிய சிவத்தை ஆன்மாவிற்குக்காட்ட, ஆன்மா அவ்வருளிலே அமிழ்ந்திமறையும். அப்போது மூன்றெழுத்து சிவ என்னும் இரண்டெழுத்தாக ஒடுங்கிநிற்கும். பின்பு திருவருள் தன்னுடன் அமிழ்ந்திக்கிடக்கின்ற ஆன்மாவுடன் சிவத்தில் அமிழ்ந்தும். அப்போது இரண்டெழுத்து சி என்னும் ஓரெழுத்தாக ஒடுங்கும்.

## பட்டணத்தடிகள்.

மாயநட் போரையு மாயா மலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் றாதையைக் கூடிப்பின் றாயைமறந்
தேயும தேநிட்டை யென்றா னெழிற்கச்சி யேகம்பனே.

## பஞ்சாக்கரசெபஞ் செய்யுமுறை.

மூலாதாரத்திலுண்டான நாதவாசகமாகிய ஹகாரந்தொடங்கி நிட்களசிவத்தை நோக்கிப்போகும் மார்க்கத்தில் ஔகாரம்முதலிய கலைகளையும், மாத்திரைகளையும், காரணேசுரர்களையும் லயம் அடைந்ததாகத்தியானித்து அவர்களுக்குமேல் துவாதசாந்தத்திலிருக்கும் பரமசிவனைத் தியானித்து, செபமாலையிலிருக்கும் உருத்திராக்கத்தை ஒவ்வொன்றாக இழுத்துச் சிவமந்திரத்தைச் செபஞ்செய்து, பரமசிவத்தில் சமர்ப்பணஞ்செய்யவேண்டும்.

செபமாலைக்கு இரண்டுமுகமணியும், மூன்றுமுகமணியும், பன்னிரண்டுமுகமணியும், பதின்மூன்றுமுகமணியும் ஆகாவாம். எல்லாம் ஓரேவிதமான முகங்களையுடையனவாய் இருத்தல்வேண்டும். நூற்றெட்டுமணியினாலேனும், ஐம்பத்துநான்குமணியினாலேனும், இருபத்தேழுமணியினாலேனும் செபமாலைசெய்க. இம்மூவகைச்செபமாலையும் போககாமிக்காம். முத்திகாமி இருபத்தைந்துமணிகொண்ட செபமாலையாற்செபிக்க.

செபத்திற்கு விரலினும் விரலிறை எட்டுமடங்குஅதிகம். அதினும் புத்திரதீபமணிமாலை பத்துமடங்குஅதிகம். அதினுஞ் சங்குமாலை நூறும டங்கு அதிகம். அதினும பவளமணிமாலை ஆயிரம்மடங்கு அதிகம் அதினும் படிகமணிமாலை பதினாயிரம்மடங்கதிகம். அதினும் முத்துமாலை இலக்கம்மடங்கு அதிகம். அதினும் தாமரைமணிமாலை பத்துலக்கம்மடங்கு அதிகம். அதினும் பொன்மணிமாலை கோடிமடங்கு அதிகம். அதினும் தருப்பைப்பவித்திரமுடிச்சுமாலை பத்துக்கோடிமடங்கதிகம். அதினும உருத்திராக்கமாலை அநந்தமடங்கதிகம்.

உருத்திராக்கமாலையைத் தரிசித்தவர்களுக்கு இலட்சம்மடங்குபலம். பரிசித்தவருக்குக் கோடிமடங்கு பலம். சரீரத்திலேதரித்தவருக்கு ஆயிரகோடிமடங்கு பலம். கையிற்கொண்டு செபித்தவருக்கு அநந்தமடங்கு பலம். செபிக்கும்போது நாயகமணிக்கு அடுத்த முகமேநோக்கியமணியை முதலாகத்தொட்டுச் செபித்து, பின்பு நாயகமணி கை அகப்பட்டதாகில், அதனைக் கடவாமல் திரும்ப மறித்துவாங்கி, அதனைத் திரும்பக் காத்திலேயிட்டுச்செபிக்க. நாயகமணியைக்கடந்து செபிக்கிற் பாவமுண்டாம். செபிக்கும்போது செபமாலை பிறர்கண்ணுக்குப் புலப்பட்டிற் செபங்கள் பயன்படாவாம். ஆதலாற் செபமாலையைப் பிறர்காணுவண்ணம் பரிவட்டத்தால்மூடிக்கொண்டுசெபிக்க. ஓசைப்படிற்பாபமுண்டாம்.

மந்திரோச்சாரணமானது மானதம், மந்தம், ஒலிஎன மூவகைப்படும். மானதமாவது நாநுனி இதழைத்தீண்டாமல் மனதினாலே செபித்தலாம். மந்தமாவது சூக்குமவைகரிவாக்கால் தன்காது மாத்திரம் கேட்கும்படி நாநுனி இதழைத்தீண்டச்செபித்தலாம். மந்தம் எனினும் உபாம்சு எனினும் ஒக்கும். ஒலியாவது தூலவைகரிவாக்கால் அருகிலிருக்கும் பிறர்செவிக்குங்கேட்கும்படி செபித்தலாம். ஒலியை வாசகம்எனவும் கூறுவர். வாசகம் நூறுமடக்கு பலமும், மந்தம் பதினாயிரம்மடங்கு பலமும், மானதம் கோடிமடங்கு பலமும் தரும் என்றறிக.

சரீராதிகளை வெறுத்த முத்திகாமி செபமாலையை மேனோக்கித் தள்ளிச்செபிக்க. போககாமி கீழ்நோக்கித் தள்ளிச்செபிக்க வீட்டிலிருந்துசெபிக்கின் ஒருரு ஒருருவேயாம். பசுக்கோட்டத்திலிருந்துசெபிக்கின் ஒன்று நூறும். திருநந்தனவனத்திலிருந்துசெபிக்கின் ஒன்று ஆயிரமாம். பருவதத்தின்மேலிருந்து செபிக்கின் ஒன்று பதினாயிரமாம். நதிக்கரையிலிருந்து செபிக்கின் ஒன்று இலட்சமாம். சிவாலயத்திலிருந்துசெபிக்கின் ஒன்று கோடியாம். சிவசந்நிதியிலிருந்து செபிக்கின் ஒன்று அநந்தமாம்.

கந்தபுராணம்:

ஆறிருநாலுடனஞ்செழுத்தையுங்
கூறினரெண்ணினர்கோதில்கண்டிகை
நீறொடுபூனைந்திறைநிலைமையுட்கொளா
வேறுளமுறையெலாம்விதியிற்செய்துபின்.

புவனங்களின்பெயர் வருமாறு:—

சாந்தியதீதகலையில் அநாசிருதை, அநாதை, அநந்தை, வியோமரூபிணி, வியாபினி, ஊர்த்துவகாமினி, மோசிகை, ரோசிகை, தீபிகை, இந்

இகை, சாந்தியதீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி என்னும் புவனங்கள் பதினைந்து உள்ளன.

சாந்திகலையில், சதாசிவம், சிகண்டி, ஸ்ரீகண்ட, திரிமூர்த்தி, ஏகருத்திர, ஏகநேத்திர, சிவோத்தம, சூட்சும, அநந்த, மனோன்மனி, சர்வபூதமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, இரௌத்திரி, ஜியேட்டை வாமை என்னும்புவனங்கள் பதினெட்டுஉள்ளன.

வித்தியாகலையில், அங்குட்டமாத்திர, ஈசான, ஏகேக்ஷண, ஏகபிங்கள, உற்பவ, பவ, வாமதேவ, மகாதியுதி, சிகேத, ஏகவீர, பஞ்சாந்தக, சூரக, பிங்க, ஜியோதி, சம்வர்த்த, குரோத, ஏகசிவ, அனந்த, அஜ, உமாபதி, பிரசண்ட; ஏகவீர, ஈசான, பவேச, உக்கிர, பீமேச, வாம என்னும் புவனங்கள் இருபத்தேழும் உள்ளன.

பிரதிட்டாகலையில், ஸ்ரீகண்ட, ஔம, கௌமார, வைஷ்ணவ, பிராஹ்ம, பைரவ, கிருத, அகிர்த; பிராஹ்ம, பிராசேச, சௌமிய, ஐந்திரக, காந்தருவ, யாக்ஷ, ராக்ஷச, பைசாச, சிலேசுவர தூலேசுவர, சங்குகர்ண, காளஞ்சர, மண்டலேசுவர, மாகோட, துவிரண்ட, சகலண்ட; தாணு, சுவர்ணாட்ச, பத்திரகர்ண, கோகர்ண, மகாலய, அவிமுத்த, உருத்திரகோடி, வஸ்திராபதக, பீமேசுவர, மகேந்திர, அட்டகாச, விமலேச, நகல, நாகல, குருக்ஷேத்திர, கயா; பைரவ, கேதார, மகாகாள, மத்தியமேச, ஆம்ராத, ஜல்பேச, ஸ்ரீசைல, ஹரிச்சந்திர; லகுளீச, பாரபூதி, டிண்டிமுண்டி, ஆஷாடி, புஷ்கர, நைமிச, பிரபாச, அமரேச எனப்புவனங்கள் ஐம்பத்தாறுஉள்ளன.

நிவிர்த்திகலையில், வீரபத்திர, பத்திரகாளி, திரிலோசன, விப்சு, நப, விவாக, சம்வாக, திரிதசேச, திரியக்ஷ, சஹத்தியக்ஷ, விபு, சம்பு; தம்ஷ்டிரி, வச்சிர, பணீந்திர, உதும்பரீச, கிரிசன, மாருதாசன, குரோதன, அனந்த, விருஷதா, விருஷ; பலப்பிரிய, பூதபால, ஜியேட்ட, சர்வ, சுரேச, வேதபாரக, ஞானபுக், சர்வஞ்ஞ, ஈச, வித்தியாதிப; பிரகாமத, பிரசாத, ஸ்ரீதிருக், இரத்தினதிருக், லட்சுமிதிருக், சடாதர, சௌமியதேக, தந்நிய, ரூபவான், நிதீச; மேகவாகன, கபர்த்தி, பஞ்சசிக, பஞ்சாந்தக, க்ஷயாந்தக, தீக்ஷண, சூட்சும, வாயுவேக, லகு, சீக்கிர; சுநாத, மேகநாத, ஜலாந்தக, தீர்க்கபாகு, ஜயபத்திர, சுவேத, மகாபல, பாசஹஸ்த, அதிபல, பல, தம்ஷ்டிரா, லோகித, தூம்ர, விரூபாக்ஷ, ஊர்த்துவசேப, பயாநக, குரூரதிருஷ்டி, ஹந்தா, மாரண, நிருதி; தருமபதி, அதர்மபதி, வியோக்தா, சம்யோக்திரு, கர்த்திரு, விதாதா, தாதா, ஹர, மிருத்தியு, யாம்ய, க்ஷயாந்தக, பஸ்மாந்தக, பப்புரு, தசன, ஜ்வலன, காதக, ஹர, பிங்கள, குதாசன, அக்கினிருத்திர; திரிதசாதிப, பிநாகி, சாத்தா, அவ்வியய, விபூதி, பிரமர்த்தன, வச்சிரதேக, புத்த, அஜ, கபாலீச; ரௌத்திர, வைஷ்ணவ, பிராம, ஆடக, கூஷ்மாண்ட, காலாக்கினிருத்திர என்னும் நூற்றெட்டுப் புவனங்கள் உள்ளன.

ஆகப்புவனங்கள் இருநூற்றிருபத்துநான்குவந்தமைகண்டுகொள்க.

எண்ணுமகா ரத்திலெண்பத் தோர்பதமுஞ்சிகாரத்
தெய்திடுதத் துவமுப்பத் தாறுவகா ரத்தில்
நண்ணிடுமக் கரமைம்பத் தொன்றும்யகா ரத்தில்
நாட்டுமனுப் பதினொன் றும் நவிலருமோங் காரத்
துண்ணிலவு நிவிர்த்தாதி கலைபைந்து முதித்திங்
கோதுசடத் துவாக்களுயர் சதாசிவமே தவற்கங்
கண்ணுதிரு மேனியுமா யிருக்கு மினிக்கலைக
ளைந்தான்ற சரிதைகிரி யையும்வருமென் றறியே.

இ—ள்: மகாரத்தில் எண்பத்தொருபதமும், சிகாரத்தில் முப்பத்தாறு தத்துவமும், வகாரத்தில்ஐம்பத்தோரக்ஷரமும், யகாரத்தில் பதினொருமந்திரமும் பிரணவத்தில் நிவிர்த்தியாதிபஞ்சகலைகளும் தோன்றும். இங்கேசொல்லப்பட்ட சடத்துவாக்கள் மேன்மைதங்கிய சதாசிவமூர்த்திக்கு திருமேனியுமாயிருக்கும். இனிச் சத்திகலைகள் ஐந்து பாந்த சரியை கிரியையும் வரும் என்றறிக.

அக. பதங்களின் பெயர் வருமாறு

சாந்தியதீதகலையில், ஓம் க.

சாந்திகலையில், வியோமவியாபிநே, வியோமரூபாய, சர்வவியாபினே, சிவாய, அநந்தாய, அநாதாய, அநாச்சிருதாய, துருவாய, சாசுவதாய, யோகபீடசம்ஸ்திதாய, நித்தியயோகினே கக.

வித்தியாகலையில், தியானஹாராய, ஓம் நமசிவாய, சர்வபிரபவே, சிவாய, ஈசானமூர்த்தாய, தத்புருஷவத்திராய, அகோரஇருதயாய, வாமதேவகுஹ்யாய, சத்யோசாதமூர்த்தயே, ஓம்நமோநம, குஹ்யாதிகுஹ்யாய, கோப்த்ரே, அநிதனாய, சர்வயோகாதிகிருதாய, சர்வவித்தியாதிபாய, ஜோதிரூபாய, பரமேசுவரபராய, அசேதனசேதன, வியோமின்வியோமின், வியாபின்வியாபின் உ௦.

பிரதிட்டையில் அரூபின்அரூபின், பிரதமபிரதம, தேஜஸ்தேஜ, ஜ்யோதிர்ஜ்யோதி, அரூப, அநக்நே, அதூம, அபஸ்ம, அநாதே, நாநா நாநா, தூ தூ தூ தூ, ஓம் பூ꞉ ஓம் புவ꞉ ஓம் சுவ꞉, அநிதன, நிதனோற்பவ, சிவ, சர்வ, பரமாத்மன். (உக)

நிவிர்த்தியில், மகாதேவ, சத்பாவேசுவர, மகாதேஜ, யோகாதிபதே, முஞ்சமுஞ்ச, பிரதமபிரதம, சர்வசர்வ, பவபவ, பவோத்பவ, சர்வபூதசுகப்பிரத, சர்வசாந்நித்தியகர, பிரஹ்மவிஷ்ணுருத்திரபர, அநர்ச்சிதாநர்ச்சித, அசம்ஸ்த்துதாஸம்ஸ்த்துத,, பூர்வஸ்திதபூர்வஸ்தித, சாக்ஷிந்சாக்ஷிந், துருதுரு, பதங்கபதங்க பிங்கபிங்க, ஞானஞான, சப்தசப்த சூட்சுமசூட்சும, சிவசிவ, சர்வ, ஓம்நமோநமோநம, சிவாய, ஓம்நமோநமோநம, ஓம் நமோநம, உஅ, ஆகப்பதம் அக, என அறிக.

முப்பத்தாறுதத்துவங்களின் பெயர் வருமாறு:—

சாந்தியதீதகலையில், சிவதத்துவம், சத்திதத்துவம்—உ, சாந்திகலையில், சதாசிவதத்துவம், ஈசுரதத்துவம், சுத்தவித்தியாதத்துவம்—ங,

வித்தியாகலையில், மாயை, காலம், கலை, வித்தை, நியதி, அராகம், புருடன்—௭ பிரதிட்டாகலையில் பிரகிருதி, புத்தி, அகங்காரம், மனம், சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிகுவை, ஆக்கிராணம், வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம், சப்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம், ஆகாசம், வாயு, தேயு, அப்பு—௨௩.

நிவிர்த்திகலையில், பிருதிவி—௧. ஆக தத்துவங்கள் ௩௬ எனஅறிக.

மந்திரங்களின் பெயர் வருமாறு.

சாந்தியதீதகலையில், சிவ, ஈசான, அஸ்திர மந்திரங்கள்—௩.

சாந்திகலையில், தற்புருஷ, கவசமந்திரம்—௨.

வித்யாகலையில் அகோர சிகாமந்திரம்—௨.

பிரதிட்டையில் வாமதேவ சிரமந்திரம்—௨.

நிவிர்த்தியில் சத்தியோசாத இருதயமந்திரம்—௨.

ஆக மந்திரங்கள் ௧௧ என அறிக.

கலைகள்: சாந்தியதீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி என ஐந்தாம்.

அக்கரங்கள் சாந்தியதீதகலையில் அகாரம் முதல் அஃ வரை அக்கரம் ௧௬. சாந்திகலையில் ஹ ஷ ஸ ௩. வித்தையில் வ முதல் ஞ வரை ௭. பிரதிட்டையில் ட முதல் ஜ வரை ௨௪. நிவிர்த்தியில் க்ஷ, ௧. ஆக அக்கரம் ௫௧ என அறிக.

சதாசிவதேவருக்கு சாந்தியதீதை திருமுடியாகவும், சாந்தி திருமுகமாகவும், வித்தைமார்பாகவும், பிரதிட்டைகுய்யமாகவும், நிவிர்த்திதிருவடியாகவும், வர்ணத்துவா தோலாகவும், புவனத்துவா மயிராகவும், மந்திராத்துவா உதிரமாகவும், பதாத்துவா தசையாகவும், தத்துவாத்துவா அத்திநிணம்முதலிய தாதுக்களாகவும் அமைந்துள்ளன.

ஆகமங்களினெல்லாம், அத்துவாக்களாறும் முதல்வனுக்கு வடிவமாகக்கூறுதல் என்னையெனின்; நிறைவுற்று அவ்வத்துவாக்கண்முழுவதிலும் கலந்து எல்லாமாகி நிற்றலானும், அவையல்லனாய் நிற்றலானும், சடசித்துக்களையெல்லாஞ் செலுத்தி உடனுமாய்நிற்றலானும் அவ்வியல்புடைய முதல்வனுக்கு தனது திரோதானசத்தியான் அவற்றோடுளதாகிய இயைபுநோக்கி, அத்துவாவும் வடிவெனக்கூறும் உபசாரமேயாம் என்க.

(சித்தியார் ௧—௨—௫௬) நிவர்த்திமுதலிய கலைகள் சத்திகலை என்றும் சத்தி அதிட்டித்தகலைஎன்றும் இருவகைப்படும். (௨௯)

தீக்கையும் வேதாகமங்களின் தோற்றமும் வாக்கு சப்தகோடிமந்திரம் இவற்றின் தோற்றமும் கூறப்படுகின்றன.

அங்கவற்றுற் சமயமொடு விசேடநிரு வாண
மருள்வழிச்சாம் பவமதன்மே லபிஷேகமென்னும்
பங்கமிலாத தீக்கைகளு மடங்கினவா றுணர்க
பகர்நிரோதி நாதமுட னந்தார்ந்த மூன்றிற்
றங்குமைம்பத் தோரெழுத்து மாகமமே தங்கள்
சாத்திரங்கள் தோன்றியிடுந் தகுவிந்து நாதம்
பொங்கிடுநா தாந்தமதில் நால்வாக்கேழ் கோடி
பேர்ந்லமனு வுள்ளடங்கி நிற்கும்பொற் புறவே.

இ—ள்: முற்சொல்லப்பட்ட நிரோதி நாதம் நாதாந்தம் என்னும் மூன்றில் ஐம்பத்தொரு அக்கரங்களும், ஆகமங்களும் வேதங்களும் மற்றுஞ் சாத்திரங்களுந்தோன்றும். விந்து நாதம் நாதாந்தங்களில் நான்குவாக்குக்களும் சத்தகோடி மகாமந்திரங்களும் உள்ளடங்கிநிற்கும். மேற்கூறப்பட்ட வேதாகமங்களில் சமயதீக்கை, விசேடதீக்கை, நிருவாணதீக்கை, திருவருள்வழியையுடைய சாம்பவதீக்கை அதன்மேல் ஆசாரியாபிடேகம் என்னும் குற்றமற்றதீக்கைகளும் அமைந்திருத்தலையும் உணர்க.

தீ ஞானத்தைக்கொடுப்பது க்ஷா பாசத்தை அறுப்பது, எனவே பாசத்தைஅறுத்து ஞானத்தைக்கொடுப்பது தீக்ஷையாம். தீக்கையானது சாதாரதீக்கை நிராதாரதீக்கைஎன இருவகைப்படும். சாதாரதீக்கையாவது இறைவன் குருமூர்த்தியை ஆதாரமாகக்கொண்டு நின்று சகலருக்குச்செய்யப்படுந்தீக்கையாம். நிராதாரதீக்கையாவது ஆதாரமின்றிநின்று பிரளயாகலர், விஞ்ஞானகலர்க்குச் செய்யுந்தீக்கையாம். அது இருவகைப்படும் அவற்றுள் ஒன்று இறைவன் தடத்தத் திருமேனியோடு முன்னின்று செய்யுந்தீக்கை மற்றொன்று ஞானசொரூபியாய் அறிவினுள்நின்று உணர்த்துவதாகியதீக்கை சகல வருக்கத்துயிர்களுக்கு மலபரிபாகம் மந்ததரம் முதலியனவாகப் பலவகைப்படுதலின் அவற்றிற்கேற்க ஆசாரியர் மலங்கெடும்படிசெய்யும் சாதாரதீக்கையும் இருவகைப்படும். அவற்றுள் திருவருள்நோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம்என்னும் ஆறும் ஒருவகை

சட்சுதீக்கையாவது—மாந்திரிகன் பாம்பினுற்கடிக்கப்பட்டவனைக் கருடபாவனையினாலே பார்த்து விடந்தீர்த்தல்போல, ஆசாரியர் சீடனைச் சிவபாவனையினாலேபார்த்துப் பாசவிமோசஞ்செய்தலாம். பரிசதீக்கையாவது: பரிசவேதியினாலே தாமிராதி லோகங்களைப்பரிசித்து, களிம்பைநீக்கிப் பொன்னுக்குதல்போலஆசாரியர் தமதுகையைச் சிவன்கையாகப்பாவித்து, அங்ஙனமே அருச்சனைசெய்து, அதனைச் சீடனுடைய தலையில்வைத்து, எங்கும் பரிசித்து அவனுடைய பாசத்திரயத்தைநீக்கி அவனைச் சிவனுக்குதலாம். வாசிகதீக்கையாவது: மாணுக்கனுடைய வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்கும் ஏற்றவாறு பதினொரு மந்திரத்தோடு பஞ்சாக்கரத்தை உபதேசித்தலாம். மானசதீக்கையாவது: ஆசாரியர் தம்முடைய ரேசகவாயுவினாலே புறப்பட்டு, சீடனுடைய பூரகவாயுவினாலே அவனுடைய இருதயத்திற் பிரவேசித்து, சீடசைதன்னியத்தைவாங்கி, துவாதசாந்தபரிய

தம் பிராசாதோச்சாரணசகிதமாய்க்கொண்டுபோய்ப்பின்புதம்முடையஇரு தயத்திலே சிவசைதன்னியத்துடன் கலந்ததாகப்பாவித்துப் பின்பு அச்சீட சைதன்னியத்தைச் சீடதேகத்திலே பிரதிட்டைசெய்தலாம். சாத்திரதீக் கையாவது ஞானசாத்திரப்பொருளையெல்லாந் தொகுத்து பதிபாசங்களு டைய இலக்கணங்களையும் சிவசீவர்களுடைய ஐக்கியத்தையும் நூல்வழியா கப்போதித்தலாம். யோகதீக்கையாவது: நிராதார சிவயோகத்தை அப்பி யாசம் பண்ணுவித்தலாம். இவ் வாறுவகைத்தீக்கையும் ஔத்திரி தீக்கை க்கு அருகரல்லாதவர்க்குப் பண்ணப்படுவதெனவும், ஔத்திரிதீக்கைக்கு அங்கம் எனவும் அறிக. இவ்வாறுடனேகூடிய ஔத்திரிசாம்பவம் மற்றொ ருவகை, ஹூதசஹிதம், ஹௌத்திரி; ஹூதம், ஓமம்.

ஔத்திரி தீக்கை: ஞானவதி, கிரியாவதி என இருவகைப்படும். ஞானவதியாவது: குண்டம், மண்டலம், அங்கி, நெய், சுருக்கு, சுருவம் முதலிய அனைத்தும் மனத்தாற்கற்பித்துக்கொண்டு விதிப்படி ஆகுதி முத லிய கிரியையை அகத்தே செய்வதாம். கிரியாவதியாவது: குண்டம் முத லிய அனைத்தும் புறத்தே அமைத்துக்கொண்டு அக்கிரியையைப் புறத்தே செய்வதாம்.

இவ்விருவகைப்பட்ட ஔத்திரிதீக்கையும் நிர்ப்பீசம் சபீசம் என இருதிறப்பட்டு ஞானத்தில் நிர்ப்பீசம், ஞானத்தில்சபீசம், கிரியையில் நிர் ப்பீசம், கிரியையில் சபீசம்என நால்வகைப்படும். அவற்றுள் நிர்ப்பீசதீக் கையாவது: மலபரிபாகமுடையராயவழியும் தீக்கைக்குப்பின் ஒருதலை யான் வழுவின்றி அனுட்டிக்கற்பாலனவாகிய சமயாசாரங்களை அனுட்டிக் கும் ஆற்றலும் அறிவும் இல்லாதவருக்கு மற்றைக்கருமங்களோடுகூடச் சமயாசாரத்தையும் ஆகுதியாற் சுத்திசெய்தொழித்து, நித்தியகருமமாத்திர த்தில் இயன்றமட்டும் அதிகாரமுடையவராகச்செய்வதாம்.

ஆயினும் சமயாசாரங்களைச் சுத்திசெய்து ஒழித்தமையின் நைமித் தியத்திலும் காமியத்திலும் அதிகாரங்கொடாமையால் இது நிரதிகாரதீக் கையெனவும் பெயர்பெறும். செபிக்கக்கூடிய மந்திரத்துக்கு மூலமாகிய பீசாக்கரமின்றி மந்திரத்தைமட்டும் உபதேசிப்பது நிர்ப்பீசம்.

இவ்வாறு செய்யப்படும் ஔத்திரிதீக்கையும், சமயம், விசேடம், நிருவாணம் என மூன்றாம். அவற்றுட் சமயமும், விசேடமும் ஒரோஒன் றேயாம். சமயதீக்கையாவது: சைவசமயத்திற்பிரவேசிக்கச்செய்வதாகிய தீக்கையாம்ஆதலின் இவர் சமயி எனப்படுவர். விசேடதீக்கையாவது: சம யப்பிரவேசஞ்செய்தவனுக்குச் சிவபூசைமுதலிய ஆராதனங்கள் செய்யும் படிசெய்வதாம். ஆராதித்தலின் இவர் புத்திரர் எனப்படுவர். மந்ததரபக்கு வமுடையார்க்குச் சமயதீக்கையொன்றுசெய்து, சரியையினையும் மந்தபக் குவமுடையார்க்குச் சமயவிசேடம் இரண்டுஞ்செய்து கிரியையினையும். தீவிரபக்குவமுடையார்க்கு அவ்விரண்டுதீக்கையினையுஞ்செய்து யோகத் தினையும் அனுட்டிக்கும்படிசெய்வர். தீவிரதரபக்குவமுடையார்க்கு நிரு வாணதீக்கைசெய்து ஞானத்தினை அனுட்டிக்கும்படி செய்வர். நிருவாண தீக்கையும் அசத்தியோநிருவாணம், சத்தியோநிருவாணம் என இருவகைப் படும் அசத்தியோநிருவாணம் தேகாந்தத்தில் முத்தியைக்கொடுப்பது. சத் தியோநிருவாணம் அப்பொழுதே முத்தியைக்கொடுப்பது.

சமயாசாரசுத்தியோடு செய்யப்படும் நிருவாணதீக்ஷையும் அந்த நிருவாணத்துக்கு அங்கமாயும் அதற்கு அங்கமாகாது தனியாயும் சமயாசாரசுத்தியோடு செய்யப்படும் சமயவிசேடங்களும் நிர்ப்பீசமெனக் கொள்க.

இனி, சபீசதீக்ஷையாவது: மலபரிபாகத்தோடுகூடக் கற்றறிவும் ஆற்றலும் மிக்குடையராயினருக்குச் சமயாசாரகன்ம மாத்திர நிறுத்தி, மற்றைக்கன்மமெல்லாஞ் சுத்திசெய்தொழித்து, நித்தியம், நைமித்தியம், காமியம் என்னும்மூன்றினும் பேரதிகாரமுடையவராகச்செய்வதாம். ஆதலின் இது சாதாரதீக்ஷை எனவும் பெயர்பெறும். இத்தீக்ஷைப்பேறுடையார் தீக்ஷைவேறுபாட்டால் சாதகரும் ஆசாரியரும் என்றிருதிறப்படுவர். சாதகராவார் சமயம், விசேடம், நிருவாணம் மட்டுஞ் செய்யப்பெற்றவர். ஆசாரியர் அம்மூன்றுடனே அபிடேகமுஞ் செய்யப்பெற்றவர். இந்தச் சபீசதீக்ஷைதான் உலோகதர்மிணியுஞ் சிவதர்மிணியமென்று இருவகைப்படும். இவை முறையே பௌதிகதீக்ஷை, நைட்டிகதீக்ஷை எனவும்பரியாயப் பெயர்பெறும்.

உலோகதர்மிணியாவது: போககாமிகட்குத் திரோதானசத்திரூபமாகிய சிகாச்சேதமின்றிச் செய்வது. சிவதர்மிணியாவது: முத்திகாமிகளுக்குத் திரோதானசத்திரூபமாகிய சிகாச்சேதத்தோடுசெய்வது. உலோகதர்மிணி அபரமுத்தியாகிய பதப்பிராப்தியைக்கொடுக்கும். சிவதர்மிணி பரமுத்தியைப் பயக்கும். சமயாசாரசுத்தியின்றிச்செய்யப்படும் நிருவாணதீக்ஷையும் அதற்கு அங்கமாகச் செய்யப்படும் சமயவிசேடங்களும் சபீசதீக்ஷை எனக்கொள்க. அத்துவசுத்தி நான்குவருணத்தாருக்குமேஉரியது. அத்துவசுத்தியாவது: ஆறத்துவாக்களிலும் கட்டப்பட்டிருக்கிற போகங்களெல்லாவற்றையும் ஏககாலத்திலே புசிப்பித்துத்தொலைப்பித்து மோக்ஷத்தைக் கொடுத்தலாம். அதுவே நிருவாணதீக்ஷை எனப்படும். அத்துவா-வழி, நிருவாணம்-மோக்ஷம்.

சாம்பவதீக்ஷை சத்தியோடு கூடிச்செய்யுந் தீக்ஷையாம்.

சிருட்டி ஆரம்பத்தில் சிவசத்தி சுத்தமாயையைநோக்கியவழிச் சர்வலோக உற்பத்தியின்பொருட்டு, சிவனுடைய இச்சாசத்தியால் விந்து கலக்கப்பட்டது விந்து கலக்கப்பட்டபோது நாதவடிவான சாத்திரமும் அட்சரவிந்துவும்தோன்றியன. அதனிலிருந்து அம்பிகாசத்திதோன்றி, சர்ப்பம்போன்றிருக்கும் வாமை, தண்டாகாரமாயிருக்கும் சியேட்டை, சிருங்கவடிவாயிருக்கும் இரௌத்திரி என மூன்று சத்திகளாயிற்று. அந்தச் சுத்தமாயை வடிவவேறுபாட்டால் சயை, விசயை, அசிதை, பராசிதை, நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை என்னும் பெயரைப் பொருந்தும் இவற்றினின்று ஐம்பத்தொரு அட்சரங்களுந்தோன்றியன. இவற்றினின்று சந்தசும் அர்த்தமும் தோன்றியன. இந்த ஐம்பத்தொரு அக்ஷரங்களுக்கும் பரமசிவன் நிமித்தகாரணர். சுத்தமாயை முதற்காரணம். சத்தி துணைக்காரணமாகும். அவ்வக்ஷரங்களால் பதம் தோன்றியன. பதங்களால் வாக்கியம் (மந்திரம்) உண்டாயின. அகாராதிஉயிர்களிற் பரமசிவனிருப்பர். மெய்களில் தேவி இருப்பர். அகாரம்முதலிய அக்ஷரங்கள் மாதிருகை என்றும், ஞானசத்தி என்றும் கூறப்படும். சிவபெருமானுக்கு இவ்வக்ஷரங்கள் அங்கங்களாயமைந்துள்ளன. அதனைக்காட்டுவாம்.

| | |
|---|---|
| 𑌅 | சிரசு. |
| 𑌆 | முகம். |
| 𑌇 | வலக்கண். |
| 𑌈 | இடக்கண் |
| 𑌉 | வலக்காது. |
| 𑌊 | இடக்காது. |
| 𑌋 | வலக்கபோலம். |
| 𑍠 | இடக்கபோலம். |
| 𑌌 | வலநாசாபுடம். |
| 𑍡 | இடநாசாபுடம். |
| 𑌏 | மேலுதடு. |
| 𑌐 | கீழுதடு. |
| 𑌓 | மேல்வாய்ப்பல். |
| 𑌔 | கீழ்வாய்ப்பல். |
| 𑌅𑌂 | தாலுமூலம். |
| 𑌅𑌃 | தாலுநுனி. |
| 𑌕 | வலப்புயம். |
| 𑌖 | வலமுழங்கை. |
| 𑌗 | வலமணிக்கட்டு. |
| 𑌘 | வலஉள்ளங்கை. |
| 𑌙 | வலவிரல்நுதி. |
| 𑌚 | இடப்புயம். |
| 𑌛 | இடமுழங்கை. |
| 𑌜 | இடமணிக்கட்டு. |
| 𑌝 | இடஉள்ளங்கை. |
| 𑌞 | இடவிரல்நுதி. |
| 𑌟 | வலப்பாதம். |
| 𑌠 | வலத்தொடைமூலம். |
| 𑌡 | வலமுழந்தாள். |
| 𑌢 | வலக்கணைக்கால். |
| 𑌣 | வலக்கால்விரல்நுதி. |
| 𑌤 | இடப்பாதம். |
| 𑌥 | இடத்தொடைமூலம். |
| 𑌦 | இடமுழந்தாள். |

𑌧 இடக்கணைக்கால்.
𑌨 இடக்கால்விரல்நுதி.
𑌪 வலப்பக்கம்.
𑌫 இடப்பக்கம்.
𑌬 முதுகு.
𑌭 நாபி.
𑌮 வயிறு.
𑌯 இருதயம்.
𑌰 வல அம்ஸம்.
𑌲 இட அம்சம்.
𑌵 கழுத்து.
𑌶 வலக்கக்கம்.
𑌷 இடக்கக்கம்.
𑌸 வலக்காலின்மேற்பக்கம்.
𑌹 இடக்காலின்மேற்பக்கம்.
𑌳 இருதயமுதற்சிரசந்தம்.
𑌕𑍍𑌷 இருதயமுதற்பாதாந்தம்.

சிவபெருமான் சகளநிஷ்களத்திருமேனிகொண்டருளி சதாசிவமூர்த்தியாய்நின்று, இந்த மாதிருகையை உபாதான காரணமாகக்கொண்டு தற்புருடமுதலிய நான்குமுகங்களால் வேதங்களை அருளிச்செய்து, மேற்கண்ணதாகிய ஈசானசம்பந்தமாகிய ஐந்துமுகங்களாலும் காமிகாதி இருபத்தெட்டாகமங்களையும் அனுட்டுப்சந்தசால் அருளிச்செய்து, வேதங்களை அநந்தேசுரர்வழியானே பிரமாவுக்கு அருளிச்செய்தனர்.

சர்வஞ்ஞத்துவகுணமுள்ள சுத்தர்களாய்ச் சிவசொரூபர்களாயுள்ள சாதாக்கியதத்துவபத வாசிகளாகிய பிரணவர்முதலிய பதின்மரையும் ஊர்த்துவசிருட்டியாற்படைத்து, அந்த நாதரூபசிவஞானமாகிய காமிகமுதலிய பத்தையும் அப்பிரணவாதியருக்குநேராகத் தாமேஉபதேசித்தார். ஆகலின் காமிகமுதலியபத்தும் சிவபேதம் எனப்படும். பின்னும் ஈசுரதத்துவத்திலிருக்கும் அநாதிருத்திரர்முதலிய பதினெண்மரையும் ஞானவான்களாகச் செய்து, அந்தச் சதாசிவநாயனாரால் அவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட விசயாதி பதினெட்டு ஆகமங்களும் அபரமாகிய உருத்திரபேதம் எனப்படும். சிவபேதம் பத்தையுங் கேட்டவர் ஒருவரிடத்தொருவராக ஒவ்வொரு ஆகமத்துக்கும் மூன்றுபேராய் பிரணவர்முதல் முப்பதின்மராவர்; அவர்பெயர் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | காமிகம் | கேட்டவர் | பிரணவர்---திரிகலர்---ஹாரர். |
| 2. | யோகசம் | ,, | சுதாக்கியர் —பஸ்மர்—விபு. |
| 3. | சிந்தியம் | ,, | சுதீப்தர்—கோபதி—அம்பிகை. |
| 4. | காரணம் | ,, | காரணர்—சர்வருத்ரர்— பிரேசசர். |
| 5. | அசிதம் | ,, | சுசிவர்—சிவர்— அச்சுதர். |
| 6. | தீப்தம் | ,, | ஈசர்—திரிமூர்த்தி —உதாசனர். |
| 7. | சூக்குமம் | ,, | சூக்குமர்-வைச்சிரவணர்-பிரபஞ்சனர். |
| 8. | சகசிரம் | ,, | காலர்— வீரர் — தருமர் |
| 9. | அஞ்சுமான் | ,, | சம்பு—உக்கிரர்—ஆதித்தியர். |
| 10. | சுப்பிரபேதம் | ,, | தேசேசர்—விக்கினேசர்—சசி. |

இங்ஙனமுபதேசிக்கப்படுங்கால் சிவனுக்கும் பிரணவருக்கும் உரிய சம்பந்தம் பரம் என்றும், பிரணவருக்கும், திரிகலருக்கும், உளதாகியசம்பந்தம் மகான்என்றும் திரிகலருக்கும் ஹாரருக்கும் உளதாகியசம்பந்தம். அந்தராளம் என்றும், ஹாரருக்கும் தேவருக்குமுளதாகிய சம்பந்தம் திவ்வியம் என்றும், தேவருக்கும் இருடிகளுக்கும் உளதாகியசம்பந்தம் திவ்வியாதிவ்வியம் என்றும் இருடிகளுக்கும் மனிதருக்கும் உளதாகியசம்பந்தம் அதிவ்வியம் என்றுஞ் சொல்லப்படும்.

உருத்திரபேதம் பதினெட்டையுங் கேட்டவர் ஒருவரிடத்தொருவராக ஒவ்வோராகமத்துக்கும் இரண்டுபேராய் முப்பத்தறுவராவர். அவர்பெயர் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | விசயம் | கேட்டவர் | அநாதிருத்திரர்—பரமேசர். |
| 2. | நிச்சுவாசம் | ,, | தசார்ணர்—பார்ப்பதி. |
| 3. | சுவாயம்புவம் | ,, | நிதநேசர்—பத்மபூ. |
| 4. | ஆக்கிநேயம் | ,, | வியோமர்—உதாசனர். |
| 5. | வீரம் | ,, | தேசர்—பிரசாபதி. |
| 6. | ரௌரவம் | ,, | பிரமேசர்—நந்திகேசர். |
| 7. | மகுடம் | ,, | சிவர்—மகாதேவர். |
| 8. | விமலம் | ,, | சருவாத்மர்—வீரபத்திரர். |
| 9. | சந்திரஞானம் | ,, | அநந்தர்—பிரகஸ்பதி. |
| 10. | முகவிம்பம் | ,, | பிரசாந்தர்—ததீசி. |
| 11. | புரோற்கீதம் | ,, | சூலி—கவசர். |
| 12. | இலளிதம் | ,, | ஆலயேசர்—லளிதர். |
| 13. | சித்தம் | ,, | விந்து —சண்டேசர். |
| 14. | சந்தானம் | ,, | சிவநிஷ்டர்—அசம்பாதர். |
| 15. | சருவோத்தம் | ,, | சோமதேவர்—நிருசிங்கர். |
| 16. | பாரமேசுரம் | ,, | ஸ்ரீதேவி--உசனர். |
| 17. | கிரணம் | ,, | தேவவிபு—சம்வர்த்தர். |
| 18. | வாதுளம் | ,, | சிவர்—மகாகாளர். |

சிவனுக்கும் அநாதிருத்திரருக்கும் உளதாகிய சம்பந்தம் பரம் என்றும், அநாதிருத்திரருக்கும் பரமேசுரருக்கும் உளதாகிய சம்பந்தம் மகான் என்றும், பரமேசுரருக்கும் தேவர்க்கும் உண்டானசம்பந்தம் திவ்வியம் என்றும், தேவர்களுக்கும் இருடிகளுக்கும் உளதாகியசம்சம்பந்தம் திவ்வியாதில்வியம் என்றும், இருடிகளுக்கும் மனிதருக்கும் உளதாகியசம்பந்தம் அதிவ்வியம் என்றுஞ்சொல்லப்படும்.

## சைவசமய நெறி.

அறுபத்தறுவர் பிரணவ ராதி
அறிவுறக்கேட் டாராக மம்.

## திருமந்திரம்.

அஞ்சன மேனி யரிவையொர் பாகத்த
னஞ்சொ டிருபத்து மூன்றுள வாகம
மஞ்சலி கூப்பி யறுபத் தறுவரு
மஞ்சா முகத்தி லரும்பொருள் கேட்டதே.

பின்னும் இவை சதாசிவதேவரால் அட்டவித்தியேசுரருட்டலைவராகிய அநந்தருக்கும், அநந்தரால் ஸ்ரீகண்டருக்கும், ஸ்ரீகண்டரால் தேவருக்கும், தேவரால் முனிவருக்கும், முனிவரால் மனுடருக்கும், மனுடரால் மனுடருக்கும் உபதேசிக்கப்படும்.

சதாசிவமூர்த்தியுடைய ஐந்துமுகங்களுள்ளும் சத்தியோசாதமுகத்தினின்றும் காமிகம்முதல் ஐந்தாகமங்களும் கௌசிகஇருடியின்பொருட்டுத்தோன்றின. வாமதேவமுகத்தில் தீப்தம்முதல் ஐந்தாகமங்களும் காசிபஇருடியின்பொருட்டுத் தோன்றின. அகோரமுகத்தில் விசயமுதல் ஐந்தாகமங்களும் பாரத்துவாசஇருடியின்பொருட்டுத் தோன்றின. தற்புருடமுகத்தில் ரௌரவம்முதலிய ஐந்தாகமங்களும் கௌதமஇருடியின்பொருட்டுத் தோன்றின. ஈசானமுகத்தில் புரோற்கீதம்முதலிய எட்டு ஆகமங்களும் அகத்தியஇருடியின்பொருட்டுத் தோன்றின என்றறிக.

இவ்விருபத்தெட்டாகமங்களும் சிவபெருமானிடத்தினின்றும் முதற்றோன்றினமையால், மூலாகமம் எனப்படும். இவற்றின்வழித்தோன்றிய உபாகமங்கள் இருநூற்றேழாம். இவை சிவாகமங்களுக்கு வழிநூல்களாம்.

சிவாகமங்கள்: சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்காகவகுக்கப்படும். சரியாபாதத்திலே பிராயச்சித்தவிதி, சிவலிங்கம் செபமாலைமுதலியவற்றின் இலக்கணம்முதலியன கூறப்படும். கிரியாபாதத்திலே மந்திரங்களின் உத்தாரணம், சந்தியாவந்தனம், பூசை, செபஓமங்கள், சமய விசேட நிருவாண ஆசாரியாபிடேகங்கள்கூறப்படும்.

யோகபாதத்திலே முப்பத்தாறுதத்துவங்கள் தத்துவேசுரர் இயம நியம ஆசன சமாதிமுதலியகூறப்படும். ஞானபாதத்திலே திரிபதார்த்தலக்கணங்கள் கூறப்படும்.

வேதத்துக்கு வழிநூல்கள் பதினெட்டுப்புராணங்களும், பதினெட்டுமிருதிகளுமாம். சார்புநூல்கள்சிட்சைகற்பமுதலிய வேதாங்கங்களாம்.

வாக்குக்கள், சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்பன. சூக்குமையாவது: சாந்தியதீதகலையைச்சார்ந்துதோன்றிச் சிவதத்துவத்தினின்றும் வெளிப்பட்டுக் காரணசரீரத்தினகத்தே நாதவடிவாய் இயங்கிக்கொண்டு ஞானமாத்திரைக்கேதுவாயிருக்கும். பைசந்திவாக்கானது சாந்திகலையைச்சார்ந்து தோன்றிச் சத்திதத்துவத்தினின்றும் புறப்பட்டு எழுத்துக்கள் வெவ்வேறாகத் தோன்றும்முறையையடக்கிச் சூக்குமரூபமாய்ச் சித்தத்தில் நிற்றலும், நிருவிகற்பமாய்த் தோன்றுதலுமாயிருக்கும். மத்திமைவாக்கானது, வித்தியாகலையைச்சார்ந்துதோன்றிச் சாதாக்கியதத்துவத்தினின்று தொழிற்பட்டுத் தன்னுள்ளே உணரும் ஓசையாய், உதானவாயுவின் தொழிற்பாட்டினால் உள்ளே அக்கரங்களின் வடிவு பிரிந்துதோன்றுவதாய் இருக்கும். வைகரியானது சூக்குமவைகரி, தூலவைகரி என இருவகைப்படும். சூக்குமவைகரி பிரதிட்டாகலையைச்சார்ந்து தன்செவிக்கு கேட்கப்படுவதாய், மகேசுரதத்துவத்திலும், தூலவைகரியானது நிவிர்த்திகலையைச்சார்ந்து தன்செவிக்கும், பிறர்செவிக்கும் கேட்கப்படுவதாய், சுத்தவித்தையிலும் நின்றுதொழிற்படுவனவாம்.

எழுகோடிமந்திரங்கள் நம, ஸ்வாகா, ஸ்வதா, வௌசட், வஷட், பட், ஹூம், என்பன. நமஎன்பது இருடிகளுக்கும், ஸ்வாகாஎன்பது தேவர்களுக்கும், ஸ்வதா என்பது பிதிர்களுக்கும், வௌஷட் என்பது பூதமுதலியவற்றுக்கும், வஷட் என்பது மனுடருக்கும், பட் என்பது உக்கிரவிக்கிரகங்களுக்கும், ஹூம் என்பது ஆஞ்ஞைத்தலைவருக்குமாம். நம என்பதை அந்தமாகஉடையமந்திரம் புருடரூபமாம். ஸ்வாகா என்பதை அந்தமாகஉடையமந்திரம் பெண்ரூபமாம். பட், வஷட், வௌஷட், சுவதாஉம், என்பவற்றை இறுதியாகவுடையமந்திரம் நபுஞ்சகரூபமாகும். இருதயாய நம, சிரசேசுவாகா, சிகாயைவஷட், கவசாயஹூம், நேத்திரேப்பியோ வௌஷட், அஸ்திராயபட், உபாங்கேப்யசுவதா எனஒருகோடியாய் எழுகோடியும் வந்தவாறுகாண்க. கோடிஎன்பது அந்தமாம்.

பிருகுணி, பிரமவேதாளி, தாணுமதி, அம்பிகை, உரூபிணி, நந்தினி, சுவாலைஎன்னும் எழுவித்தியேசுவரிகளும் சத்தகோடிமகாமந்திரங்களுக்கும் ஈசுவரிகள். இவற்றைத்தத்துவப்பிரகாசத்திலும், மிருகேந்திரத்திலும்காண்க.

ஹகாரசந்தியாற்பரிணமித்த அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம்என்னும் ஐந்தும் பஞ்சகலைப் பிராசாதமாம்; ஹகாரசந்தியாற்பரிணமித்த அகாரம், உகாரம், மகாரம், விந்து, அர்த்தசந்திரம், நாதம், சத்தி, சமனைகளெட்டும் அட்டகலாப்பிராசாதமாம். ஹகாரம், ஔகாரம், ஊகாரம், மகாரம், விந்து, அர்த்தசந்திரம், நாதம், சத்தி, உன்மனைஎன்பன ஒன்பதுகலைப் பிராசாதமாம். சமயதீக்கையில் ஐங்கலைப் பிராசா

தமும், விசேடதீக்கையில் எண்கலைப்பிராசாதமும், நிருவாணதீக்கையில் பதினாறுகலைப்பிராசாதமும் வேண்டப்படும் என அறிக. இங்ஙனம் பிராசாதசட்சுலோகி வியாக்கியானத்திலும், சித்தாந்தசாராவளியினுங்கூறப்பட்டன. (உகூ)

சோடசகலைகூறப்படுகின்றது.

பன்னியிடு மேதையருக் கீசம்விட கலையே
    பயில்விந்து வர்த்தசந் திரநிரோதி நாத
மன்னியிடு நாதாந்தஞ் சத்திவியா பினிமேல்
    வருசமனை யுன்மனைபன் னிருகலையாய் மருவு
மின்னிவரு சமனைக்கும் வியாபினிக்கும் நடுவே
    வியோமரூ பினியனந்தை அநாதையநா சிருதை
யென்னுமொரு நாலுகலை பொருந்திடக் கலைக
    ளீரெட்டா யுரைக்குமர னிணையடிக்கீ ழிவையே. ()

இ—ள்: மேதாகலை, இராசகலை, விடகலை, விந்துகலை, அர்த்தசந்திரகலை, நிரோதிகலை, நாதகலை, நாதாந்தகலை, சத்திகலை, வியாபினிகலை, சமனைகலை, உன்மனைகலை என்பன பன்னிருகலைப்பிராசாதமாம். சமனைகலைக்கும் வியாபினிகலைக்கும் நடுவே, வியோமரூபி, அநந்தை, அநாதை, அநாசிருதை என்னும் நான்குகலைகளை அமைத்தால் பதினாறுகலைப்பிராசாதமென்று சொல்லப்படும். இவை சிவபெருமானது திருவடிகளின்கீழடங்கும் எ—று.

அருக்கீசம்—இராசகலை.

சித்தாந்தசாராவளி.

[illegible]
    [illegible]
[illegible]
    [illegible]
[illegible]
    [illegible]
[illegible]
    [illegible] (உஎ)

அறைந்திடும்பன் னிருகலைக்கு மாத்திரைகள் வகுக்கி
    லருமேதை மூன்றுகு மருக்கீச மிரண்டா
முறைந்தவிட கலையொன்றாம் விந்துகலை யரையா
    முயசர்த்த சந்திரன்கால் நிரோதியரைக் காலாங்

குறைந்திடுமா கர்ணியதாம் நாதம்நா தாந்தம்
குலவரைமா வரைக்காணி சத்தியையம் முந்திரிகை
நிறைந்தவியா பினியுமதிற் பாதியதாஞ் சமனை
நேராமுன் மனையதுகீ ழரையதரைக் காலே.

இ—ள்: மேற்கூறிய பன்னிருகலைப் பிராசாதத்துக்கும் மாத்திரைகள் வகுக்குமிடத்து, மேதாகலைக்கு மூன்றுமாத்திரையாகும். இரசகலைக்கு இரண்டுமாத்திரையாகும். விடகலைக்கு ஒருமாத்திரையாகும். விந்துகலைக்கு அரைமாத்திரையாம். அர்த்தசந்திரகலைக்குக் கால்மாத்திரையாம். நிரோதிகலைக்கு எட்டிலொருகூறு மாத்திரையாம். நாதகலைக்குப் பதினாறிலொருகூறு மாத்திரையாம். நாதாந்தகலைக்கு முப்பத்திரண்டிலொருகூறு மாத்திரையாம். சத்திகலைக்கு அறுபத்துநான்கிலொருகூறு மாத்திரையாம். வியாபினிகலைக்கு நூற்றிருபத்தெட்டிலொருகூறு மாத்திரையாம். சமனைகலைக்கு இருநூற்றைம்பத்தாறிலொருகூறு மாத்திரையாம். உன்மனைகலைக்கு ஐஞ்ஞூற்றுப்பன்னிரண்டிலொருகூறு மாத்திரையாம் எ—று.

## சித்தாந்தசாராவளி.

[illegible]
[illegible]

(௨அ)

## பன்னிருகலைகளின் தானம் கூறப்படுகின்றது.

ஆதார முதலுந்தி யளவுங்கோ டகலை
யதனின்று மிதயாந்த மேதகலை யிதய
மீதாருங் கண்டவள வருக்கீசங் கண்ட
மேற்றாலு வளவும்விட கலைபுருவம் விந்து
வோதாரு நெற்றிநடுப் பிரமரந் திரமீரு
மொளிகொ ளர்த்த சந்திரனே நிரோதிநாதம்
நாதாந்தம் பிரமரந்திர மேற்றுவாத சாந்தம்
நடுச்சத்தி வியாபினியுஞ் சமனையுமுன் மனையாம்.

இ—ள்: மூலாதாரம் முதல் நாபிவரையும் கோஷகலையின் தானமாம். நாபிமுதல் இருதயம்வரையும் மேதாகலையின் தானம். இருதயமுதற் கண்டம்வரையும் இரசகலையினிடம். கண்டம்முதல் நாவடிவரையும் விடகலையின் தானமாம். நாவடிமுதல் புருவநடுவரையும் விந்துகலையின் தானமாம். நெற்றிமுதல் பிரமரந்திரமீறாக அர்த்தசந்திரம், நிரோதி, நாதம், நாதாந்தம் என்னும் நாற்கலைகளின் தானமாம். பிரமரந்திரத்தின்மேல் துவாதசாந்தம்வரையும் சத்தி, வியாபினி, சமனை, உன்மனை என்னும் நாற்கலைகளினது தானமாம் எ—று. (௨௯)

## பன்னிருகலைகளின் அங்குலம் இருசெய்யுட்களாற் கூறப்படுகின்றது

உரைத்திடுமூ லாதார முதனாபி யந்த
முறுகோட கலைத்தான மொருபதிரு விரலாம்
வரைத்திடுமுந் தியினின்று மிதயாந்த மேதை
மருவியிடு மங்குலியோ ரெட்டாக மதிக்கும்
நிரைத்திதய முதற்கண்ட மாந்தமருக் கிசம்
நிகழும்விர லெட்டாகு நீள்கண்ட முதலாய்ப்
பொருத்திடு தாலுவின்மூல மளவும்விட கலையாம்
பிறங்கும்விரல் நாலாகப் பேசியிடு மன்றே.

இ—ள்: முற்சொல்லப்பட்ட மூலாதாரம்முதல் நாபியந்தம், கோடகலையின் தானம் பன்னிரண்டங்குலமாம். நாபிமுதல் இதயாந்தம் மேதாகலையின் தானம் எட்டங்குலமாக நிச்சயிக்கப்படும். இருதயமுதற் கண்டாந்தம் இரசகலையின் தானம் எட்டங்குலமாம். கண்டமுதல் நாவடிவரையும் விடகலையின்தானம் நாலங்குலமாகச் சொல்லப்படும் எ—று. (௬௦)

புருவநடு வரைவிந்துத் தானமுநால் விரலாம்
புகல்புருவ நடுப்பிரம ரந்திரமட் டாகப்
பெருகுமர்த்த சந்தி[illegible]ன முதற்புகல்நா லுக்கும்
பிறங்கிடுமோவ் வொன்றுக்கு மும்மூன்று விரலாம்
வருபிரம ரந்திரத்திற் சத்தியோரங் குலமேல்
மருவுவியா பினியொருமூன் றஞ்சமனை நான்கா
மருவமுறு முன்மனைக்கு மொருநான்காய்த் தான
மவையொன்பா னங்குலங்க ளறுபதென வறியே.

இ—ள்: நாவடியாதி புருவநடுவந்தம் விந்துகலையின் தானம் நான்கங்குலமாம். புருவநடுமுதல் பிரமரந்திரம் வரையுமுள்ள (பன்னிரண்டங்குலத்தில்) அர்த்தசந்திரகலைக்கு மூன்றங்குலமும், அதன்மேல் நிரோதிகலைக்கு மூன்றங்குலமும், அதன்மேல் நாதகலைக்கு மூன்றங்குலமும், அதன்மேல் நிரோதிகலைக்கு மூன்றங்குலமும், அதன்மேல் நாதகலைக்கு மூன்றங்குலமும், நாதாந்தகலைக்கு மூன்றங்குலமுமாம். (மூலாதாரம்முதல் பிரமரந்திரம்வரையுமுள்ள) தானங்கள் ஒன்பதாம். (நாதாந்தகலைக்குமேல்) வரும் பிரமரந்திரத்திற் சத்திகலை ஓரங்குலமாம். (அச்சத்திகலைக்குமேல்) வியாபினிகலை மூன்றங்குலமும், (வியாபினியின்மேல்) சமனை நான்கங்குலமும், (அதன்மேல்) உன்மனைகலை நான்கங்குலமுமாக, (மூலாதாரம்முதல்) துவாதசாந்தம்வரையும்கூடிய அங்குலங்கள் அறுபதென்றறிந்துகொள்க எ—று.

பிராசாத சட்கத்தில் கோஷகலைக்குப் பன்னிரண்டங்குலம். மேதாகலைக்கு நான்குஅங்குலம். இரசகலைக்கும் விடகலைக்கும் விந்துகலைக்கும்

எட்டெட்டங்குலம். அர்த்தசந்திர நிரோதி நாத நாதாந்தகலைகளுக்கு மும் மூன்றங்குலம். சத்திகலைக்கு ஒரு அங்குலம், வியாபினிகலைக்கு மூன்றங் குலம், சமனுகலைக்கு நான்கங்குலம், உன்மனுகலைக்கு நான்கங்குலம் எனக்கூறப்பட்டிருக்கிறது. பிராசாதமாலை முதலிய நூல்கள் வேறுவிதமாகக் கூறும். (௬க)

பன்னிருகலைகளின் வடிவம் கூறப்படுகின்றது.

அவ்வுடனு காரமகா ரம்பிறங்கும் விந்து
வருத்தசந்தி ரன்றிரிகோண மாகியிடு மிதன்மே
லெவ்வமிலா விருமருங்கு சுழிநடுத்தண் டொன்றே
யியல்வலத்து விந்துவுடன் கலப்பையதொன் றுருஞ்
செவ்விந்து விடம்படைத்த நல்வலமு மொன்றே
தெரிவலத்து விந்துவுடன் றிரிசூலமொன்றுங்
கவ்வையக விருவிந்து நடுவிரண்டு ரேகை
கருதியிடுங் குடிலமிவை கலைபன்னிரண் டினுக்கே.

இ—ள்: (மேதாகலை) அகர வடிவமும், (இராசகலை) உகர வடிவமும், (விடகலை) மகாரவடிவமுமாக விளங்கும். (விந்துகலை) புள்ளிவடிவமாம் (அர்த்தசந்திரகலை) பாதிச்சந்திரன்போன்றதாம். (நிரோதிகலை) முக்கோணவடிவமாயிருக்கும் இதற்குமேல் (நாதகலை) இரண்டுபக்கங்களிலும் இருவிந்துக்களோடுகூடிய நடுவில் ஒருதண்டுவடிவாம். (நாதாந்தகலை) வலப்பக்கத்து விந்துவோடுகூடிய கலப்பைவடிவாம். (சத்திகலை) இடப்பக்கத்து விந்துவோடுகூடிய கலப்பைவடிவாம் (வியாபினிகலை) வலப்பக்கத்து விந்துவோடுகூடிய திரிசூலவடிவாம். (சமனுகலை) இருபக்கங்களிலும் இருவிந்துக்களோடுகூடிய நடு இரண்டுரேகையாம். (உன்மனுகலை) விருத்தமாம. இவைகளே பன்னிரண்டுகலைகளின் வடிவமாகும் எ—று.

வியோமரூபி, அநந்தை, அநாதை, அநாசிருதைஎன்னும் நாற்கலைகளும் நான்குவிந்துக்களோடுகூடியன என்பது இந்நூலில் "சொற்றிடுகுளிகமா" என்னுஞ்செய்யுளால் உணரப்படும்.

பிராசாதசட்கம், நாதகலை இரண்டு விந்துவும் நடுவிற் கலப்பைவடிவுமாம் எனவும், சத்திகலை நடுவிந்து இருபுறத்திலும் இரண்டுகலப்பைவடிவு எனவும், வியாபினி இரண்டு விந்துக்களோடுகூடிய திரிசூலம் எனவும் கூறும். (௬உ)

கலைகளின்காரணேசுரர்கூறப்படுகின்றது.

பதுமமல ரயன்மேதைக் கருக்கீசக் கலைக்குப்
பகர்திருமால் விடகலைக்குப் பரவுமுருத்திரனுஞ்
சிதைவில்பெரு விந்துவுக்கு மகேசுரனே தெய்வந்
திருந்துமர்த்த சந்திரன் முதலொருநான் கினுக்கு

முதியசதா சிவந்தெய்வஞ் சத்திமுதல் நாலா
முதற்கலைக்குச் சிவனெனவே மொழிந்திடுவர் முதியோர்
மதிபொதியுந் திருமுடியா னின்றதிரு வடிக்கீழ்
வான்முறையா யிருப்பரென வழுத்திடுமா கமமே.

இ—ள்: மேதாகலைக்குத் தாமரைஆசனனாகிய பிரமனும், இரசகலைக்குத்திருமாலும், விடகலைக்கு உருத்திரனும், விந்துகலைக்கு மகேசுவரனும் அதிபர்களாம். அர்த்தசந்திரன், நிரோதி, நாதம், நாதாந்தம் என்னும் நாற்கலைகளுக்கும் சதாசிவம் தெய்வமாம். சத்தி, வியாபினி, சமனை, உன்மனை என்னும் நான்குகலைகளுக்கும் அநாகதசிவம்தெய்வம் என்று (அறிவான்) முதிர்ந்தோர்சொல்வார்கள். பாலசந்திரனை அணிந்த திருமுடியையுடைய சிவபெருமானுடைய ஊன்றிய திருவடிகளின்கீழ் வரிசையாக இருப்பார்களென்று சிவாகமங்கள்சொல்லும் எ—று.

சத்தி, வியாபினிஎன்னும் இருகலைகளுக்கு ஆகதசிவமும், வியோமரூபைமுதல் நாற்கலைகளுக்கும் பரமசிவமும், சமனைக்கும் உன்மனைக்கும் அநாகதசிவமும், அதிதேவர்கள் என்று பிராசாதஷட்கம் கூறும்.

பிராசாதமந்திரத்திற்கு வாச்சியப்பொருள்பரமசிவனேஎனக்கூறும் வாக்கியத்தோடு பிராசாதகலைகளுக்குப் பிரமாமுதலியோரைக் காரணேசுவரர்ஆவர் எனக்கூறும்வாக்கியம்முரணுமன்றோஎனின்; பரமசிவனே அந்தந்தமந்திரங்களை அதிட்டித்துப் பிரமா என்றற்றொடக்கத்துப் பெயரும் அவ்வவ்வடிவமுமுடையவராகத் தியானிக்கப்பட்டு, ஆங்காங்குக் காரணேசுவரராகி நிற்பரென்னும் பொருள் குறித்தலால் அதுசிறிதும் முரணாது என்க.

ஆதியும்மாணுயயன்மாலுமாய்ப்—பாதிபெண்ணுருவாயபரமன்.

(திருநாவுக்கரசுநாயனார்.)

அன்றியும் பிராசாதமந்திரத்தின் அவயவமாய்நின்ற நாதஎழுத்தாகிய முதற்காரணத்தினின்றே அணுபக்கத்தினராகிய பிரமாமுதலியோருக்கு உரியவாசகமந்திரங்களும் பிறக்கும் ஆதலின் எல்லாமந்திரங்களும் பிராசாதத்திற்பிறந்தனவாம். அது துவிசதிகாலோத்தரத்திலே அகாரஎழுத்தினின்று எண்கலையோடுகூடிய சத்தியோசாதமும், உகாரத்தில் பதின்மூன்று கலைகளோடுகூடிய வாமதேவமும், மகாரத்தில் எண்கலைகளோடு கூடிய அகோரமும், விந்துவில் நாற்கலைகளோடுகூடிய தற்புருஷமும், நாதத்தில் ஐங்கலைகளோடுகூடிய ஈசானமுமாக இவ்வைந்துமந்திரமும் பிராசாதத்திற்பிறந்தன எனக்கூறுதலாலும் இப்பொருளுணர்க.

அவ்விதமாயின் அகாரம் முதலியன பிரணவகலையாயும், ஹகாரம் முதலியன பிராசாதகலைகளாயும் இருக்க, இங்கேபிரணவகலைகளைப் பிரா

சாதகலையென மாறிக்கூறியது என்னையெனில்; அகாரஹகாரங்களுக்கு வேற்றுமையுண்மையானும், உகாரமுதலியன வேறுபடாமையானும், பிரணவகலைகள் பிறந்தபின்னர்ப் பிராசாதகலைகளும் அவற்றின் பின்னர்ச்சத்தியோசாத முதலியனவும் பிறந்தனவாதலானும் அங்ஙனம் கூறியதென்க. இதுபற்றியே பிரணவம் எல்லாமந்திரங்களுக்கும் முதற்கண்வழங்கப்படும் என்பதாம்.

மேதாகாரணமாகிய பிரமா இரசகாரணமாகிய விட்டுணுவிற்றோன்றுவர். இரசகாரணமாகிய விட்டுணு விடகாரணமாகிய உருத்திரரிற்றோன்றுவர். விடகாரணமாகியஉருத்திரர் விந்துகாரணமாகிய மகேசுவரரிற்றோன்றுவர். விந்துகாரணமாகிய மகேசுவரர் அர்த்தசந்திர, நிரோதி, நாத, நாதாந்த காரணமாகிய சதாசிவரிற்றோன்றுவர். அர்த்தசந்திர, நிரோதி, நாத, நாதாந்த காரணமாகியசதாசிவர் சத்தி, வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை உன்மனைகாரணமாகிய அநாகத சிவனிற்றோன்றுவர். இங்ஙனந் தோன்றலாலே பின்பின்உள்ளது. முன்முன்உள்ளதாற் படைக்கப்பட்டமைஅறிக.

### கலைகளின் தத்துவவியாத்தம் கூறப்படுகின்றது.

பிருதிவிமு தற்பிரகிரு திபரியந்த மேதை
பேசருக்கீ சம்பொருந்தும் பிரிவில்கலை யாறில்
மருவும்விட கலைமாயை பொருந்தியிடும் விந்து
வளர்சுத்த வித்தையுட னீசுரத்தின் வரையா
முருவமுறு மர்த்தசந்திரன் முதலொருநான் கினுக்கு
மோங்குசதா சிவன்சத்தி சத்திமுத லாய்
மருவுகலை நாலுக்கும் சிவமாந் தத்துவம்
வரன்முறையில் வியாத்தமென வழுத்தியிடு மாகமமே.

இ—ள்: பிருதுவிதத்துவம் முதல் மூலப்பிரகிருதி அந்தம் (இருபத்துநான்கு தத்துவங்களில்) மேதாகலையின் வியாத்தமாம். (புருடன் முதலிய ஆறுதத்துவங்களில் இரசகலையின் வியாத்தமாம். மாயாதத்துவம் வரை விடகலையின் வியாத்தமாம். சுத்தவித்தை ஈசுவரம் என்னும் இருதத்துவங்கள் வரை விந்துகலையின் வியாத்தமாம். அர்த்தசந்திரன், நிரோதி, நாதம், நாதாந்தம் என்னும் நாற்கலைகளுக்கும் வியாத்தம் சதாசிவதத்துவம் சத்திதத்துவம் வரையுமாம். சத்தி, வியாபினி, சமனை, உன்மனை என்னும் நாற்கலைகட்கும் சிவதத்துவாந்தம் சொல்லப்பட்டகிரமப்படி வியாத்தமென்று ஆகமங்கள் துதிக்கும் எ—று.

## சித்தாந்தசாராவளி.

[illegible] (௫௪)

[பன்னிருகலைகளின் நிறம் கூறப்படுகின்றது.]

உற்றசொரி தழலொன்று மதியிரவி கூடு
　　மொளியொன்று மின்னொளியொன் றுறுதீப மொன்று
மற்றிரும்வா ளொளியொன்று புகைநிறமொன் றுகு
　　மணிதிகழு மாணிக்க வொளிநாத மொன்று
குற்றமில்மின் னொளியிரண்டாம் நாதாந்த மொன்று
　　கூறிரவி நூறுசத்தி வியாபினியா யிரமாஞ்
சொற்றிடுமச் சமனையொரு கோடிகதி ரொளியாஞ்
　　சூழனந்த சூரியர்போற் றோன்றிடுமுன் மனையே.

இ—ள்: மேதாகலை அக்கினிச்சுவாலைபோன்ற ஒளியுடையது. இரசகலை சந்திர சூரியர்களது ஒளிபோன்ற ஒளியுடையது. விடகலை மின்னலின் ஒளிபோன்ற ஒளியுடையது. விந்துகலை தீபத்தின் ஒளிபோன்ற ஒளியுடையது. அர்த்தசந்திரகலை வாளொளிபோன்ற ஒளியுடையது. நிரோதிகலை புகைபோன்ற நிறமுடையது. நாதகலை மாணிக்கத்தினத்தின் ஒளிபோன்ற ஒளியுடையது. நாதாந்தகலை இருமின்னலின் ஒளிபோன்ற ஒளியுடையது. சத்திகலை நூறு சூரியப்பிரகாசம்போன்றது. வியாபினிகலை ஆயிரம் சூரியப்பிரகாசம்போன்றது. சமனகலை கோடி சூரியப்பிரகாசம்போன்றது. உன்மனகலை அநந்த சூரியப்பிரகாசம்போலத் தோன்றும் எ—று.

வாளொளியாவது வாளினை விளக்கிவெயிலிலே வீசும்போதுள்ள பிரபையாம்.

சொரிதழலொன் றிந்திரவி கூடுமொளி யொன்று
தோன்றியமின் னொளியொன்று சுடர்த்தீப மொன்று
பரவியவா ளொளியொன்று புகைநிறமொன் றாகும்
படர்நாத மாணிக்க வொளியொன்று பார்க்கில்
வருமிரண்டு மின்னொளியாம் நாதாந்த மொன்று
வருமிரவி நூறுசத்தி வியாபினியா யிரமாம்
அருள்சமனை யொருகோடி யாதவர்போ லெறிக்கும்
அநந்தசூ ரியரொளிபோ லணிதருமுன் மனையே.

எனப்பிராசாதமாலை கூறுவதனாலும் இதனை அறிக. (கூ௫)

அ—ஊ.க: வியோமரூபைமுதலிய கலைகளின் வடிவமும் நிறமும் உன்மனாந்தம் பரமசிவம் எனவும் கூறப்படுகின்றன.

ஓதுகலை காரியங்கள் பொருந்தியிடாக் கலைக
ளூறுவியோம ரூபியனந்தை யனாதையனா சிருதை
தீதிலூறு விந்துவந்த நான்கினுக்கு நான்காந்
தீதில்ஞான வாகாய ஞானசாக ரம்பின்
னேதமிலா ஞானதருப் பணமுமகா கோடி
யிந்துவொளி யிவைதியான மென்பர்களுன் மனைக்கு
நீதமுற வுரைக்கிலது சமனாந்தம் பாசம்
நிகழ்துவாத சாந்தமே லுன்மனைக்கப் பாலாம்.

இ—ள்: கலைகளாகிய வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை என்னும் அந்த நான்கினுக்கும் நான்கு விந்துவடிவாம். சொல்லப்பட்ட கலைகள் மாத்திரைமுதலிய காரியங்களைப் பொருந்தமாட்டா.

அந்த நான்குக்கும் நிறமாவது (வியோமரூபை) ஞானாகாயம்போன்ற ஒளி; (அநந்தை) ஞானசமுத்திரம்போன்ற ஒளி; (அநாதை) ஞானக்கண்ணாடிபோன்ற ஒளி; (அநாசிருதை) மகாகோடி சந்திரர்களது ஒளியாம். இவை மாத்திரையின்றி மனமிறந்து தியானிக்கப்படுவனவாம் என்றுகூறுவார்கள். சமனாகலையந்தம் பாசத்தொடர்பாம்; உன்மனையை நன்னெறிபொருந்தச்சொல்லுகில் அது துவாதசாந்தத்துக்குமேல், உன்மனாகலைக்கப்பால் பரசிவமாம்.

ஸ॰ நாதேவாஸஜாஸ௦உ ந்ந தேவா ஸ்ரீவ:

நிலைமை சொல்லுநெஞ் சேதவ மென்செய்தாய்
கலைக ளாயவல் லான்கயி லாயநல்
மலையன் மாமயி லாடு துறையனும்
தலையின் மேலு மனத்துளுந் தங்கவே.

(திருநா—குறுந்தொகை.) (௧௬)

## ஆறு சூனியமும் ஏழு விடுவமுங் கூறப்படுகின்றன.

மிகுமேதை முதன்மூன்று கலைமுடிவி லொன்றும்
விந்துமுதல் மூன்றுகலை முடிவில்விளை வொன்றும்
தகுநாத முதன்மூன்று கலைமுடிவி லொன்றுஞ்
சந்தவியா பினிக்குமொன்று சமனையதற் கொன்றுந்
தொகுஞான வுன்மனைக்கு மொன்றாகப் பேத
சூனியமா றாகுமிதன் மேற்பரமாம் விடுவம்
புகுபிராணன் மனுநாடி பிரசாந்தஞ் சத்தி
புகல்காலந் தத்துவமென் றேழாகப் புகலும்.

இ—ள்: மேதாகலை, இரசகலை, விடகலை என்னும் மூன்றுகலைகளின்முடிவில் ஆதிசூனியமாம். விந்துகலை, அர்த்தசந்திரகலை, நிரோதிகலைஎன்னும் மூன்றுகலைகளின்முடிவில் மத்தியசூனியமாம். நாதகலை, நாதாந்தகலை, சத்திகலைஎன்னும் மூன்றுகலைகளின் முடிவில் அந்தசூனியமாம் வியாபினிகலை முடிவில் ஆதிசூனியமாம். சமனைகலைமுடிவில் மத்தியசூனியமாம். உன்மனைகலைமுடிவில் அந்தசூனியமுமாகப் பேதசூனியம் ஆறும். இதன்மேற் பரமசிவம் வீற்றிருப்பர். விடுவங்கள்: பிராணவிடுவம், மந்திரவிடுவம், நாடிவிடுவம், பிரசாந்தவிடுவம், சத்திவிடுவம், காலவிடுவம், தத்துவவிடுவம் என ஏழாகச் சொல்லப்படும்.

## சூனியமாவது இன்னதென்பது கூறுதும்:—

நாதரூபமாகிய ஹம்ஸ என்பதில் ஹம் என்பது பிராணவிருத்தியாயும் ஸ என்பது அபானவிருத்தியாயும்இருக்கும். ஹம்ஸ என்னும்நாதமே அவ்வவ்விடங்களிற்சேர்ந்து பகுப்புண்டு, பலஎழுத்துக்களாகிப் பரிணமிக்கும். ஆதலால் முதலாகிநின்ற ஹம்ஸ என்பதிலுள்ள ஹகாரமானது ஔகார ஊகார மகாரவடிவமாகிப் பரிணமிக்கும்போது அதன் வடிவத்தின்மையே ஆதிசூனியமாம். அகாரமானது விந்து அர்த்தசந்திர நிரோதி வடிவாகிப் பரிணமிக்கும்போது அதன் வடிவத்தின்மையே மத்தியசூனியமாம். ஸகாரமானது நாத நாதாந்தசத்திவடிவாகிப் பரிணமிக்கும்போது, அதன் வடிவத்தின்மையே அந்தியசூனியம். இம்மூன்றும் மூலாதாரமுதல்பிரமரந்திரமுடிவாகியதேகத்திலுள்ள எழுத்துத்திரி

புவடிவமாதலின் சகளப்பிராசாதசூனியம் எனப்படும். இனி நிஷ்களமாய் இரண்டாவதாய்நின்ற ஹம்ஸ என்பதிலுள்ள மூன்றெழுத்தும் முறையே வியாபினி, சமனை, உன்மனைவடிவாகிப் பரிணமிக்கும்போது அம்மூன்றெழுத்துக்களின்மையே மேலுள்ள மூன்றுசூனியங்களாம்.

## பிராசாதசந்திரிகை.

[illegible]
[illegible]
[illegible]

## பிராசாத சட்கம்.

தோன்றுமக ரத்தின்மே னிரோதிசத்தி யின்மேற்
றோற்றும்வியா பினிசமனை யுன்மனைமேற் சுன்னே.

எழுவிடுவங்களுள்பிராணவிடுவமாவது: ஆன்மாவும் மனமும் பிராணனும் என்னும் இவைகளுடைய சம்யோகமாம். மந்திரவிடுவமாவது: மந்திரமுச்சரிக்கும்போது வேறுமனதின்றி இருதயம்முதற் பிரமரந்திரம் வரை அகார உகாரமுதலியவற்றைப் பொருந்துதலானும் விடுதலாலும் உச்சரிப்பதாம். நாடிவிடுவமாவது: நாடிகளுக்கு மூலமானதும் தசக்கிரந்திகளையும் பிளந்துசெல்வதுமாகிய சுழுமுனைநாடிமார்க்கமாக சிவசத்தியினால் சிவபீசமாகிய ஹகாரம் நாதகலையை அடைந்து அங்கே நாதமாய்க்கேட்கப்படுவதாம். பிரசாந்தவிடுவமாவது: பிரமா முதலியவர்களிடத்தில் அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம், நாதாந்தம் என்னும் ஆறு இடங்களில் தியாகஞ்செய்து, ஏழாவதாகிய சத்தித்தானத்தில் நாதத்தினுடைய வயமாம். சத்திவிடுவமாவது: சத்தியையடைந்த நாதத்திற்குமேல் எவ்வளவு சத்தியுடைய சஞ்சாரம் இருக்கின்றதோ அவ்வளவுஞ்சத்திவிடுவமாம். காலவிடுவமாவது: சத்தி, வியாபினி, சமனைஎன்னுஞ் சத்திகளின்வியாபகத்தைஅடக்கிய உன்மனையிலடங்கினது காலவிடுவமாம். தத்துவவிடுவமாவது: உன்மனைசத்தியைக்கடந்தவரும் துவாதசாந்தத்திற்குமேல் உள்ளவரும் பரமானந்தசொரூபியும் சதாசிவம்முதலிய உருவங்களைக்கடந்தவரும் மனோவிருத்திஉள்ளவரையும் பாசத்தொடர்புண்மையால் மனத்துக்கு அதீதமானவரும் ஆகிய பரமசிவத்தில் பாவனையினால் அத்துவிதமாகத் தியானித்தலாம்.

அத்துவிதநிலையாவது: ஆன்மபோதமும் கண்ணொளியும்போலச் சிவமும் ஆன்மாவும் தம்முள் இரண்டற ஒற்றுமைப்பட்டுநிற்றல். பிரமமும்

ஆன்மாவும் எனப்பொருள் இரண்டில்லை ஒன்றேயெனக்கூறுவர் மாயாவாதிகள். சிவமும் ஆன்மாவும் வேறுபொருள்எனவும் அவ்விருபொருளே இரண்டென வேற்றுமைப்படாது அதுவிதுவாய்ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்கும் எனவுங் கூறுவர் சைவசித்தாந்திகள். அத்துவிதம் என்னுஞ்சொற்கு இரண்டின்மைஎனப் பொருள்கொள்வர் மாயாவாதிகள். இரண்டன்மைஎனப் பொருள்கொள்வர் சைவசித்தாந்திகள். (கஎ)

அகோரசிவாசாரியர் நிருவாணதீக்ஷையில், ஶிஷ்யப்ராணாந் ஸம் என்பதனால்பிராணவிடுவத்தையும், ஸார்த்தத்ரயாம் நாடீப்ரவாஹஸ்ய நாஶநாந்து என்பதனால் நாடிவிடுவத்தையும், மந்த்ரவிஷ்டாமோக்ஷணார்த்தாந்து என்பதனால் மந்திரவிடுவத்தையும், ப்ரஶாந்தஶ்ரீநாத என்பதனால் பிரசாந்தவிடுவத்தையும், ஶக்திகாயம் என்பதனால் சத்திவிடுவத்தையும், காலவிடுவத்தையும், ஷட்த்ரிம்ஶத்தத்த்வாதீதே ஶிவே ஸம்யோஜயேத் என்பதனால் தத்துவ விடுவத்தையும் உணர்த்திச் சிவத்துடன் ஆன்மாவைச் சேர்க்கும்படி கூறியிருத்தலையும் உணர்க. இதுபற்றியே துவிசதிகாலோத்தரத்தில் பிராசாதம் அறியான் குரு அல்லன் எனவும் அவன் சீடர்களோடு முத்தியடையமாட்டான் எனவும் கூறியதூஉம் என்க.

---



## புத்தக விக்கிரயம்.

| | | |
|---|---|---|
| சிவபூசைவிளக்கம் | ரூபா 1 | சதம் 50. |
| மகேசசைவசந்திரிகை | | சதம் 30. |
| பிராசாததீபம் உரை | | சதம் 40. |
| அச்சுவேலி சித்திவிநாயகர் ஊஞ்சல் | | சதம் 3. |

இவைகளை எம்மிடத்திலும், சுன்னாகம் தனலக்குமிபுத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ச. கு. வைத்தீசுவரசர்மா,
அச்சுவேலி P. O.
யாழ்ப்பாணம்.